REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 19 | சுன்னுகம், சர்வதாரி மாசி கசு (காந்தி ஆண்டு 80) 27-2-'49, ஞாயிறு | இதழ் 30

வெளிவந்துவிட்டது — 2-ம் பதிப்பு

மொழிப் பயிற்சி

[3-ம் புத்தகம்]

முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி

4-ம், 5-ம் வகுப்புகளுக்கேற்ற இலக்கணப் பகுதிகள் முழுவதும் இந்நூல்மூலம் கற்பிக்கப்பட வசதியுண்டு. பெயராயும் வினையாயும் வருஞ் சொற்கள், ஒருபொருட் பலசொல், சொற்புணர்ச்சி, எழுவாய் பயனிலை வேற்றுமை, செய்வினை செயப்பாட்டு வினை, முதலிய வினை வகைகளும், பலவித பயிற்சிகளும் இதில் அடங்கியிருக்கின்றன.

விலை ரூபா 1-00 தபாற்செலவு வேறு

சுன்னுகம் : தனலக்குமி புத்தகசாலை

# மேனுட்டாரின் நடுக்கம்!

## இலங்கைக்குத் துணை ஆசியா

**இரண்டாவது மகா யுத்தம் முடிவடைந்தவுடன், வல்லரசுகள் உட்படப் பலநாடுகள் சங்கங்களும் ஒப்பந்தங்களும் ஏற்படுத்துவதில் முனைந்துள்ளன**

**சமீபத்தில் இந்தியப் பிரதமர் நேருஜி புதுடில்லியில் ஆசிய மகாநாட்டைக் கூட்டியிருந்தார். மேற்றிசையில் அத்லாந்திக் ஒப்பந்தம் ஒன்று உருவாகி வருகின்றது.**

**இவற்றையெல்லாம்** பார்த்துக்கொண்டிருந்த அவுஸ்திரேலியாவின் எதிர்க்கட்சித் தலைவர் ரூபேட் மென்ஸீஸ் பஸிபிக் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்த யோசித்துள்ளார். அத்திலாந்திக் ஒப்பந்தத்தின் நோக்கங்களை ஒருவரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். ஆனல் எதற்காகப் பஸிபிக் ஒப்பந்தம் ஒன்று முளைகொள்ள வேண்டுமென் பதே பலரின் கேள்வியாகும். நோக்கம் நன்ருக விருப்பினும் இதிலே சேர்ந்து கொள்ள வேண்டுமென்ற தவனம் அப்பகுதியிலுள்ள நாடுகளுக்கு உண்டாகுமெனக் கூறுவதற்கில்லை.

ஒருவேளை கொம்யூனிஸ்ட் கொள்கைகளைப் பரவவிடாது தடைசெய்வதற்கு மென்ஸீஸ் அவர்களின் நோக்கம் பலனளிக்கக்கூடும். எப்படியிருந்தபோதிலும் அரசியல் இராணியை அடிப்படையாகக் கொண்ட இம்முயற்சி செத்துப் பிறக்கும் சிசுபோலன்றி ஓரளவுக்கு மூச்சு விட்டுக் கொண்டிருக்குமாயின் அதனல் ஒரு கெடுதியும் உண்டாக இடமிராது. அதிக நன்மையையும் எதிர்பார்க்க முடியாது.

### இலங்கை அதிருப்தி

மென்ஸீஸ் அவர்களின் முயற்சியைக்கண்டு இலங்கை அவ்வளவாகத் திருப்தியடைவதாயில்லை. குறித்த ஒப்பந்தத்தில் அமெரிக்கா, நியூஸிலந்து, இந்தியா, பாகிஸ்தான், இலங்கைபோன்ற நாடுகள் சேர்க்கப்படுகின்றன. ஆனல் சீனம், சியாம், இந்தோசீனம், மலாயா, பர்மா ஆகியாம் நாடுகள் மென்ஸீஸ் அவர்களின் கண்களுக்குத் தென்படாதிருப்பதும் ஒரு விந்தையேயாகும். ஒத்த பொருளாதாரம், பாதுகாப்பு, பூகோள அமைப்புப் போன்ற தொடர்புகள் கொண்ட நாடுகளே ஒன்ருக இணைந்து கொள்ளவேண்டுமெனக் குறித்த ஒப்பந்தத்தைப்பற்றித் தமது கருத்தைத் தெரிவிக்கும் மந்திரி பண்டாரநாயகா அவர்கள் தொடர்ந்து கூறியதாவது: இவ்வாறு சேர்ந்து கொள்ளும் நாடுகள் பின்னர் ஐக்கிய சங்க ஸ்தாபனத்தின் எல்லைக்குள் நின்று உழைக்கலாம். இலங்கை, பசிபிக் கூட்டுறவுடன் சேரவேண்டியதேயில்லை. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் இணைப்பே இலங்கைக்கு உரியது. இதில், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, மலாயா, பர்மா, இந்தோனேஷியா ஆகியாம் நாடுகள் சேர்ந்துகொள்ளலாம். இந்நாடுகள் அனைத்துக்கும் பொதுவான ஒரு சமுதாய நாட்டம் இருக்கின்றது."

பஸிபிக் உறவு ஏற்படுவதையிட்டு இலங்கை மந்திரி பண்டாரநாயகாவுக்கு எவ்வித ஆட்சேபமுமில்லை. ஆனல் இதனல் எதும் நன்மை ஏற்படுமென்பது பற்றித்தான் அவர் சந்தேகப்படுகின்ருர்.

### நீண்டவுங் கூடாது

சோவியத்து யூனியனுக்கும் கொம்யூனிஸ்டுகள் இயக்கத்துக்கும் தீங்கு விளைவிப்பதே மென்ஸீஸ் திட்டத்தின் அடிப்படையான நோக்கமென **தோழர் கெனமன்** கருதுகின்ருர். அமெரிக்காவும், இங்கிலாந்திலுள்ள போலிக் கட்சியினரும் இதற்கு உறுதுணை செய்கின்றனர் எனவும் அவர் கருதுகின்ருர். ஏகாதிபத்தியக் கூட்டத்தினரின் ஆசீர்வாதத்துடன் கருக்கொள்ளும் இத்திட்டத்தை இலங்கை தீண்டவுங் கூடாதென தோழர் கெனமன் மீண்டும் அழுத்தியுள்ளார்.

### மகாமோசம்

சோவியத்துமண்டலத்துக்குப் போட்டியாகக் கிளம்பும் இந்த ஆங்கிலேய — அமெரிக்கத்திட்டம் மகா மோசமானதொன்றென **டொக்டர் என். எம். பெரேரா** கருதுகின்ருர். சீனத்திலே சோவியத்தின் கை ஓங்கி வருவதைக்கண்டு பீதிகொண்டே பஸிபிக் கூட்டுறவு முளைகொண்டுள்ளதெனக் கருதும் டொக்டர் மீண்டும் கூறுவதாவது: "அவுஸ்திரேலியாவுக்கு 'வெள்ளை அவுஸ்திரேலியா'வின் கொள்கைகள் பயத்தையூட்டுவது இயற்கையேயாகும். அதற்காக தென்கிழக்கு ஆசியமக்களும் அவர்களுடன் இழுபடவேண்டியதேயில்லை. இந்தியாவும், பாகிஸ்தானுமே இலங்கைக்கு உற்றதுணையாவன"

# அண்ணல் வழி உய்வதா?

## அணுக்குண்டால் அழிவதா?

**அணுக்குண்டு, விஷக்** கிருமி யுத்தம் என்பவற்றுக்கு இலக்காகவுள்ள உலக மக்களை காந்திஜியின் வழியைப் பின்பற்றிக் கடைத்தேறும்படி செய்வதற்கு இன்னும் இடமிருக்கிறன்து. ஆனல் காந்திஜி காட்டும் உன்னத நிலையை அடையும் சக்தி உலகிலுள்ள தேசங்களில் எதற்காயினும் உண்டா? என பெதிக் லோரன்ஸ் பிரபு காந்திஜி பற்றி எழுதிய புத்தகத்திற் குறிப்பிடுகின்ருர்.

இப்புதிய புத்தகம் இம்மாதம் 22-ந் திகதி லண்டனிற் பிரசுரமாயிற்று. **காந்திஜியின் வாழ்க்கை** வரலாறு பற்றி இதுவரை வெளிவந்த நூல்களில், இந்நூலே பூரணமான தொன்றென அதன் பதிப்பாளர் கருதுகின்ருர். இதில் உலகசரித்திரத்திற் காந்திஜியின் பங்கு யாதென்பது பற்றிப் பிரபு பெதிக் லோரன்ஸ் எழுதியுள்ளார். அன்னரின் தென்னுபிரிக்க வாழ்க்கை விபரங்களை எச். எஸ். எல். பொலொக் தந்துள்ளார். இரு யுத்தங்களுக்கு மிடையே நிகழ்ந்த மகாத்மாவின் வாழ்க்கைச் சம்பவங்களைப் பற்றிப் பிரபல பத்திரிகையாளரான எச். என். பிரெயில்ஸ் போட் வரைந்துள்ளார். 30 வருடகாலமாக காந்திஜியுடன் சேர்ந்து சேவைபுரிந்த ஸ்ரீமதி சரோஜினி தேவி மகததான இப்புத்தகத்துக்கு முகவுரை எழுதியுள்ளார். கவிதையை ஒத்த தமது முகவுரையில் அவர் கூறுவதாவது: ஒப்பாருமிக்காருமில்லாத இந்த மகானின் கண்ணியம் வாய்ந்த குணம், தயை, தைரியம், விவேகம், நகைச்சுவை, பண்பாடு என்பனவற்றை யார்தான் சரியாக வர்ணிக்கமுடியும்? அன்னரின் குணங்களை வர்ணிக்க உலகில் உள்ள அகராதிகளில் வார்த்தைகள் இல்லை."

புத்தர் யேசு போன்றவர்களைப் போலன்றி காந்திஜி தமது உயரிய ஆத்மார்த்திக அரங்கினின்றும் இறங்கி வந்து சாதாரண மக்களின் அன்ருட வாழ்க்கையிலே தாராளமாகப் பங்குபற்றினர். இவ்விஷயத்திலே அவர் எபிரேய தீர்க்கதரிசிகளைப் போல நடந்துகொண்டார் என்று சொல்லாம் எனப் பெதிக் லோரன்ஸ் எழுதியுள்ளார்.

# செலவுப் பெருக்கம்

## 'சாரம்' அணிந்த கோலம்

25-2-49.

**இலங்கை அரசாங்கத்துக்கு எண்ணெய்ச் செலவின்றிப் பிள்ளை வளர்ப்புக் கிடையாதெனப் பல சந்தர்ப்பங்களில் இங்கு குறிப்பிடப்பட்டது. சுதந்திரங் கிடைத்த பின்னரும் செலவுகள் குறைந்தபாடில்லை.**

உணவு - கூட்டுறவுப் பகுதியினல் மட்டும் நாட்டுக்குச் சென்ற மாதத்தில் ரூ.7,495,441 வரை செலவாகியிருக்கின்றது

எடுத்ததற்கெல்லாம் கல்விச் செலவே கங்குகரையின்றிப் பெருகிவருகின்றதெனப் பணக்காரக் கும்பலும், அதிகாரவர்க்கத்தினரின் தயவை நாடி நிற்கும் அரசியல் வாதிகளும் கதறி வருகின்றனர். ஆனல், சென்ற ஜனவரிமாதத்தில் உணவுச் செலவும் ஏறியிருக்கின்றதே!

### சென்றவருடம்

சென்றவருடம் ஜனவரியில் உணவு கூட்டுறவு சம்பந்தமாக ரூ. 406,914 மட்டுமே செலவாகியுள்ளது. நடப்புநிதி வருடத்திற் குறித்த செலவுக்கென ரூ. 59,[illegible] ஒதுக்கப்பட்டது. ([illegible]டத்தை ஒக்டோபர் 1948ல் இருந்து கணிக்கவும்) ஆனல் முதல் நான்கு மாதங்களும் ரூ. 29,749,137 விழுங்கிவிட்டு "இன்னுங் கொண்டுவா தின்று பார்ப்போம்," என்கின்றன. இத்தொகை திட்டமிடப்பட்ட ஒருவருடத் தொகையில் அரைவாசிக்கு மேலாகின்றது.

### வீடுகட்டுதல்

தொழிலாளர்மீது அரசாங்கம் சிரத்தை காட்டவருகின்றது இடைவிடாத கூச்சலே இதற்கு ஒரு காரணமாகும். தொழிலாளரின் சக்தியை இன்று அகில உலகமும் நன்கு உணர்ந்துவருகின்றது. ஆகவே, அவர்களின் சேமலாபத்தில் இலங்கை அரசாங்கமும் அக்கறை காட்டிவருவது நூதனமன்று.

கொலன்னுவையிலே தொழிலாளருக்கெனச் சிலவீடுகளையும் வசதிகளையும் அரசாங்கம் சென்றவருடத்தில் அமைத்துக் கொடுத்தது. இப்போது கொழும்பு நகரசபையும் தொழிலாளர்களுக்கென வீடுகள் கட்டும் திட்டமொன்[illegible] ஆரம்பித்துள்ளது. [illegible] 10 இலட்சம் ரூபாய்

# கொழும்பு-நிருபர் கடிதம்



உதவ முன்வந்துள்ளது. வனத்தமுல்ல என்ற பகுதியில் இது சம்பந்தமாக 160 வீடுகள் தொழிலாளர்களுக்கென அரசினருக் குரித்தான நிலத்திற் கட்டப்பெறும். இதற்கான முதல் வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. அத்துடன் கிரிலப்பொனே என்ற இடத்தில் 380 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. அடுத்தமாதத்திலே தொழிலாளர்களும், சொற்ப சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்களும் இங்கு கிருகப் பிரவேச விழாவைக் கொண்டாடுவார்கள்!

### கைலஞ்சப் புகார்

கொழும்பு நகர சபை மேயர், உதவி மேயர் சம்பந்தமாகவும், அங்கத்தவர்களின் ஏனைய கடமைகள் சம்பந்தமாகவும், நகரசபை அங்கத்தினரிடையே கைலஞ்சம் போன்ற ஊழல்கள் மலிந்து கிடப்பதாக நாடெங்கும் ஒரே பேச்சாக இருக்கின்றது. இவற்றையெல்லாம் அரசாங்கம் விசாரிக்க வேண்டுமெனப் பலர் கருதுகின்றனர். அடுத்த மாதம் நகரசபை கூடும்போது தோழர் கெனமன் இத்தகைய விசாரணை அவசியமெனக் கூறி ஒரு பிரேரணையைச் சமர்ப்பிப்பார். இவருக்கு இது விஷயத்தில் ஐந்து அங்கத்தினரின் உதவி கிடைக்குமென நம்பலாம்.

### வானம் வழங்கவில்லை

தாங்கமுடியாத குளிரைப் பற்றிச் சென்றவாரம் குறிப்பிட்டிருந்தேன். இனி இங்கு தண்ணீர்த் தட்டுப்பாடும் ஏற்படக்கூடுமென நினைந்து பயப்பட வேண்டியிருக்கின்றது. தண்ணீர் விநியோகத்தில்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

## உள்ளே .........


| | |
|---|---|
| ஊர்வதந்தி | 2 |
| முருகன் கை வேல் | 3 |
| தமிழர் திருவிளக்கு | 3 |
| ஐ. நா. சங்கம் | 4 |
| கலைக்களஞ்சியம் | 5 |
| பாதை ஓரத்தில் | 6 |
| இந்தியா | 7 |
| நமது வாசிகசாலை | 7 |
| செய்திகள் | 8 |
| பாலர் பகுதி | 9 |
| கலாபவனம் | 10 |
| தொடர்கதை | 11 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ.........ர்

# வதந்தி



● கொண்டோடி ●

● தமிழர்களின் கதி யென்ன வாயிற்றென்று உங்களுக்குத் தெரியாதாம்.

☼ இக்கதியை நிச்சயிப்பதற்கு ஒரு மாபெருங் கூட்டம் கூடினார்களாம்.

☼ மாபெருங் கூட்டத்திற்கு வந்தவர்கள் ஐஞ்ஞூற்றுக்கு மேற்பட்டிராதாம்.

☼ எல்லாரும் தூங்கி வழிந்து கொண்டிருந்தார்களாம்.

☼ கூலிக்கு மாரடிப்பவர்கள் போலக் காணப்பட்டார்களாம்.

● பத்திரிகைக்காரர்களும் இப்பொழுது கூலிக்குத்தான் மாரடிக்கிறார்களாம்.

☼ அட கடவுளே! எழுத்தாளர்களும் அப்படித்தானும்.

☼ நானும் அப்படித்தானும்.

● பள்ளிக்கூட ஆசிரியர்கள் ஒரு கூட்டம் கூடினார்களாம்.

☼ மல்லாகத்திற்றான் கூடினார்களாம்.

☼ திரு. வன்னியசிங்கம் தலைமை வகித்தாராம்.

☼ எங்களுக்காகப் பாராளுமன்றத்தில் என்ன செய்திருக்கிறீர் என்று ஒரு ஆசிரியர் கேட்டாராம்.

☼ யூ. என். பிக் கட்சி எங்களையொன்றும் செய்யவிடுவதில்லை யென்றாராம்.

☼ ஒருவர், அப்பொழுதுளதற்காக அங்கு போனீர் ஐயா என்றாராம்

☼ கூலிக்கு மாரடிக்கப் போனதென்று தான் தமிழர் நினைக்கிறார்களாம்.

☼ பள்ளிக்கூட ஆசிரியர்களும் இப்படித்தானும.

● பள்ளிக் கூட மாணவ மாணவிகளின் மண்ணீரலைப் பரிசீலனைசெய்யப் போகிறார்களாம்.

☼ இந்தப் பரிசீலனை ஏற்கனவே ஆரம்பித்து விட்டதாம்.

☼ இதனாற் சிலமாணவமாணவிகளுக்குக் குடல்நடுக்கமெடுக்கின்றதாம்.

● பாண் செய்வோரும் குடல் நடுங்கித் தானிருந்தார்களாம்.

☼ அவுஸ்திரேலியாவிலிருந்து 9000 டன் மா வந்திருக்கிறதாம்.

☼ பாண்போறணைக் காரருக்கு இப்பொழுதுதான் நெஞ்சில் தண்ணீர் வந்ததாம்.

● கஷ்டப்பட்டுத் தண்ணீர் பாய்ச்சியே இவ்வளவு நாளும் விவசாயிகள் வந்தனராம.

☼ இதை டி. ஆர். ஓ. ஒருவர் சங்கானையிற் சொன்னாராம்.

☼ மின்சார சக்தியினால் விவசாயத் தொழிலைச் செய்ய வேண்டுமென்றும் சொன்னாராம்.

☼ சக்தியிருந்தால் தான் அன்பும் இருக்குமாம்.

☼ ஏனெனில் அன்பேசிவமாம்.

● பலாங்கொடைத் தோட்டத்தின் முதலாளி திரு. கந்தையா ரூபா 40,000 கொடுக்கிறாராம்.

☼ யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் குழந்தைகளுக்கென்று ஒரு கட்டிடம் போடுவதற்குத் தானும்.

● தமிழ்க் கொங்கிரஸ் குட்டிக் கட்டிடத்தில் இருந்த ஒரு செங்கட்டி தவறி விழுந்து விட்டதாம்.

☼ ஸ்ரீ டி. எஸ். துரைராஜா தமிழ்க் கொங்கிரஸிலிருந்து விலகிவிட்டாராம்.

## — கர்ணபரம்பரை —

கொண்டோடியின் கர்ணபரம்பரை கடந்த இருவாரங்களாக மீண்டும் வெளியாகி வந்துள்ளது. இக் குறுகிய கால எல்லைக்குள் 'கொண்டோடி'யின் செய்தித்துணுக்குகள் யாவும் வாசகர்கள் பலரைக் கவர்ந்து விட்டன. கல்வித்துறையில் நல்ல அனுபவம் பெற்றவரும், தமிழ்ப்பேரறிஞருமான பெரியார் ஒருவர் 'கர்ணபரம்பரை' என்பதற்குப் பதிலாக ஊர்வதந்தி என மாற்றிக் கொள்வதே உகந்ததெனக் கூறினார். 'கொண்டோடி'க்கு இது விஷயத்தைத் தெரிவித்த போது, அவரும் அதை வரவேற்றார். ஆகவே, இனி, அவர் ஊர்வதந்தி புடைசூழ விஜயம் செய்வார்! 'கொண்டோடி' இங்கு கிண்டல் செய்வதில்லை. உண்மைச் செய்திகளைத் தான் சிறிது தாளிதத்துடன் வழங்குகின்றார். அவற்றைப் படித்து நாங்கள் அனுபவிக்கவேண்டியது தான். ப. ர்.

☼ 'கொம்பிறெசன்' 'கொம்பிறெசன்' என்று சொன்னவர்கள் இதை நினைத்துத் தானும்.

☼ இப்பொழுதுதான் இவருக்குப் புத்திவந்ததாம்.

☼ இருக்க இருக்க மற்றவர்களுக்கும் புத்திவருமாம்.

● யாழ்ப்பாணக் கமக்காரருக்குச் சினிமாமூலம் புத்தி புகட்டுகிறார்களாம்.

☼ வடபிரிவுக் கமத்தொழில் உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர்தான் திரு. குக்காம்.

☼ பழைய முறைகளை விட்டு விடவேண்டுமாம்.

☼ புதிய முறையிலே அனுஷ்டிக்க வேண்டுமாம்.

● இதைக் கேட்கப் பலபேருக்கு வாயூறுகிறதாம்.

☼ வாயூறப்பேசி என்ன பயன் வரப்போகிறதாம்.

☼ திரு. மொலமூரே மீது திரு சுந்தரலிங்கம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தாராம்.

☼ இருகொடிகளுக்குக் கீழ் இருப்பது தனக்குப் பிடிக்கவில்லையாம்.

☼ திரு. மொலமூரேயின் கட்டளைப்படியே இருகொடிகள் பறக்கின்றனவாம்.

☼ இதைத் திரு. சுந்தரலிங்கம் கேட்கக்கூடாது என்றும் சொன்னாராம்.

☼ திரு. சுந்தரலிங்கம், திரு. மொலமூரேக்கு பிரயோகிக்கத் தகாத சொற்களை எழுதி ஒரு கடிதம் அனுப்பினாராம்.

☼ இதுதான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலாதாரமென்று பலர் சொல்கிறார்களாம்.

சிறந்தபலனுக்கு

C. C. C. புகையிலைப்பசளை

கொழும்பு
கொர்மேர்ஷல்
கொம்பனியார்

இரண்டு விதமான வெவ்வேறு கலவைகள் எங்களால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று சப்புகிற புகையிலைக்கு வேண்டிய மாதிரியிற் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்படுகிறது. மற்றது சுருட்டுப் புகையிலை அல்லது குடி புகையிலைக்கு வேண்டிய மாதிரியில். இவ்விரு கலவைகளும் தோற்றத்தில் அதிக வித்தியாசமுடையவை. கமக்காரர்கள் தங்கள் தேவைக்கு எழுதும் போது தாங்கள் பசளையிடப்போகும் புகையிலை (மேலேகாட்டிய) எந்த வகையைச் சேர்ந்ததென விபரமாகக் கூறவேண்டும்

C. C. C.

கொழும்பு
கொமர்ஷல்
கொம்பனி
லிமிற்றெட்

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றியவிபரங்களுக்கு உடனே எழுதவும்.

The
Colombo
Commercial
Company
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழ்நாட்டின் விளம்பர கர்த்தாவாக
இன்று திருவள்ளுவர் உலகில் வாழ்கின்றார்"

# தமிழர் திருவிளக்கு

வித்துவான்
பொன். கனகசபை

திருவள்ளுவர் என்னும் பெயர் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்போர்க்கு மாத்திரம் வழிகாட்டியாக விளங்கிய காலமும் ஒன்றிருந்தது. அக்காலத்திலே தமிழகத்துள்ளேதான் திருவள்ளுவர் வாழ்வைப் பெற்றார். ஆனால் இன்று இவ்வுலக முழுவதுமே அவரைக் கைதொழுது நிற்கின்றது. எல்லாத் தேசங்களும், எல்லாக் கண்டங்களும் திருவள்ளுவரை நல்வரவேற்கின்றன. இரு நூற்றுக்கு மேற்பட்ட மொழிகளிலே அவர் இயற்றிய திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுவிட்டது. வீரமாமுனிவர் கண்ட 'ஒரு விளக்கு' இன்று உலகுக்கு ஒளி கொடுக்கின்றது. திருக்குறளைப் படிக்கும் புற மொழியாளர் நம் தமிழ்ப் பண்பைக் கண்டு வியக்கின்றனர். திரைகடலோடித் தமிழ்த் திரவியங்களைத் தேடிவந்து, கலைப் பொக்கிஷங்களைக் கண்டு களித்து, ஆராய்ச்சி உலகில் நின்று இறவாப் புகழைச் செந்தமிழ் நாட்டுக்குக் கொடுத்து வணக்கஞ் செய்கின்றார்கள். பழந் தமிழர் பிரதிநிதியாகவும், தமிழ்த் திருநாட்டின் விளம்பர கர்த்தாவாகவும் இன்று திருவள்ளுவர் உலகில் வாழ்கின்றார்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு.

என்ற அமரகவி வாக்கில் இன்னும் எத்தனை எத்தனை உயிர்த் துடிப்புக்கள் மண்டிக் கிடக்கின்றனவோ.

## வாழ்ந்த காலம்

சங்க மருவிய நூலான மணிமேகலையிலே திருவள்ளுவர், 'பொய்யில் புலவன்' எனப் போற்றப்படுகிறார். போற்றப்படுவதால் அந்நூலாசிரியருக்குத் திருவள்ளுவர் காலத்தால் முற்பட்டவராகின்றார். நமக்குக் கிடைக்கும் கடைச்சங்கப் புலவர் பாட்டுகளுட் பல, திருவள்ளுவரையுந் திருக்குறளையும் பாராட்டுகின்றன. அப்பாட்டுகளினுள் நுழைந்து ஆராயும்போது, கடைச்சங்கப் புலவர்கள் பலரும் காலத்தால் திருவள்ளுவருக்குப் பிந்தியவர்களாகவே தெரியவருகின்றது. இடைச்சங்க, தலைச்சங்க காலங்களிலோ அவற்றின் முன்போ திருவள்ளுவர் வாழ்ந்தார் என்பதற்குப் போதிய, நம்பத்தகுந்த ஆதாரங்கள் ஏதுவுமில்லை. கடைச்சங்க காலத்தின் முற்பகுதியை வள்ளுவர் காலம் எனக் கொள்ளுதலே சிறந்தது. இடைச்சங்கம் கி. மு. 3-ம் நூற்றூண்டளவில் அழிந்தது. அதன்பின் எழுந்த கடைச்சங்கத் தொடர்பு கி. பி. 5-ம் நூற்றூண்டு வரை இருந்தது. ஆதலால் கிறிஸ்தவ ஆண்டின் ஆரம்ப காலத்திலோ அல்லது அதற்குச் சிறிது முன்போதான் வள்ளுவர் வாழ்ந்தார்.

## பிறந்த ஊர்

தமிழ் நாட்டில் வழங்கும் பழங்கதை ஒன்று திருவள்ளுவர் மயிலாப்பூரில் வாழ்ந்தார் எனக் கூறுகின்றது. அதற்கு சங்க இலக்கியங்களாவது பிற்காலத்தில் வாழ்ந்த சமயாசாரியர்களாவது சான்று பகரவில்லை. ஆதாரமொன்றுமின்றி அபிமானங்கொண்டு கூறுவார்கூற்று நியாயமாகாது. நல்கூர்வேள்வியார் என்னும் புலவர்,

"உப்பக்க நோக்கி
யுபகேசி தோண்மணந்தான்
உத்தர மாமதுரைக்
கச்சென்ப—இப்பக்கம்
மாதானு பங்கி
மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற்
கச்சு" என்னும் பாவில்,

'செந்நாப்போதார் புனற்கூடற்கு அச்சு' எனக் கூறுவதை நுனித்து நோக்கின் திருவள்ளுவரது ஊர் திருமயிலையன்று என்பது தெளிவாகும். சங்கத் தமிழ் தழைத்திருந்த மதுரையம்பதியே திருவள்ளுவரைப் பெற்று வளர்த்துப் பேறுபெற்ற இடமாகும்.

## வள்ளுவர் பெயர்

இன்று நம் கண்முன்னே வள்ளுவர் எனத் திரிபவர்கள் பிறப்பாற் பெயர் பெற்றவர்கள்; பறைக்குலத்தார்க்குப் புரோகிதராயும், நிமித்திகராயும் இருப்பவர்கள்; காலால் நடந்து பறையைக் கழுத்திலிட்டறைந்து வாயாற் கரையும் ஒரு வகுப்பார். இவர்களிடைக் கல்வி மணம் வீசுவதில்லை. கையெழுத்துத்தானும் போட அறிந்தவர்கள் வெகு சிலரே; பெரும்பாலும் கைக்கீற்றுக்காரரே. இப்படிப்பட்ட வகுப்பினருள் ஒருவர்தான் திருக்குறளைப் பாடினார் என்றால் உலகமே சிரிக்கும். திருக்குறள் பாடியவர் இன்றைய வள்ளுவரைச் சேர்ந்தவரல்ல என்பது வெளிப்படை. பெருங்கதை சிந்தாமணி நூல்கள் எழுந்த காலத்து வள்ளுவர்கள், மன்னர் மணமனைய நற்செய்திகளையும் பெருவிழாக்களையும் பட்டத்து யானைப்பிடர்த்தலையிருந்து முரசுகொட்டி அரச வீதியிலே தெரிவித்தனர். ஆனால் சங்க காலத்து வள்ளுவர்கள் மன்னர் மணமனைய நற்செய்திகளையே பட்டத்து யானைமீதிவர்ந்து அகநகர் வீதியிலே தெரிவித்து, மன்னர்க்குட்படு கருமத் தலைவராய் இருந்தனர். சங்க காலத்தில வள்ளுவன் என்பது ஏனாதி போன்ற வரிசையும் பதவியும் உள்ள ஒரு உத்தியோகமே.

"வள்ளுவன் சாக்கை
எனும்பெயர் மன்னர்க்
குள்படு கருமத்
தலைவர்க் கொன்றும்."

என்னும் சேந்தனார் திவாகரம் இதை உறுதிப்படுத்துகின்றது.

## அவர் ஒருவர்

அக்காலத்திற் கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்தோரே வள்ளுவராக அமர்ந்தனர். ஏனையோர் வள்ளுவராக இயலாது. நுண்மாண் நுழைபுலமுடைய வேளாளன் ஒருவன் வள்ளுவப் பதவியைப் பெற்றான். நாஞ்சில் வள்ளுவன் எனும் பெயருடன் அவன் பாடிய பாட்டுக்கள் புறநானூற்றை மிளிரச் செய்கின்றன. அவன் சோமன்னற்கு உள்படுகருமத் தலைவனாக இருந்தான். அவ்வாறே நம் தெய்வப் புலவரான திருவள்ளுவரும் ஒப்புயர்வற்ற கல்வியறிவுடையவராய் அரசற்கு உள்படுகருமத் தலைவராக இருந்தார். பழுத்த அரசியல் அனுபவம் உடையவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களிலும், அரசியலிலும், ஏனைத் துறைகளிலும் இவர் பெற்றிருந்த அனுபவத்தின் சாரமே திருக்குறளாகும். அரசற்குள்படு கருமத் தலைவனாய்—வள்ளுவனாய் இருந்தமைகொண்டு இவரை வள்ளுவர் வள்ளுவர் என வழங்கலாயினர். பழைய காப்பிய குடியிற் பிறந்தவர் பலருள்ளும் தொல்காப்பியர் என்பது ஒருவரையே சுட்டுமாறுபோல, வள்ளுவத் தொழில் புரிந்தவர் பலருள்ளும் திருவள்ளுவர் என்பது ஒருவரையே சுட்டுகிறன்றது. சாதிமத நிறபேதமின்றி எல்லோருக்கும் உவகையளிக்கும் உண்மைகளை அள்ளிச் சொரிந்த செந்நாப் புலவரை எல்லோருமே விரும்பினர். அகக்கண்ணாலும் புறக்கண்ணாலும் கண்டாரால் விரும்பப்படுந் தன்மை யுடையவராயிருந்தமையின் 'திரு' என்ற அடையைக் கொடுத்துத் திருவள்ளுவர் எனப் போற்றிப் புகழ்ந்தனர்.

## பெற்றோருஞ் சுற்றமும்

பிறர்க்குரியாளராய்ப் பெருந்தொண்டு புரிந்து வாழ்ந்தோரே நம் பழந்தமிழர். தம் தூயவாழ்வில் ஊறிய இன்ப ரசங்களைத் திரட்டி வைப்பதன்மூலம் தம் புகழை நிறுத்தித் தாம் மாய்ந்தார்கள். அவர்கள் குலம், குடி பெயர்களைப் பெரிதென மதித்து வாழவில்லை. அவர்களது நூல்கள் வாயிலாக அவர்களின் குலங் குடிகளையோ, பிறப்பு வளர்ப்பையோ, உறவின் முறையாரையோ நிச்சயிக்க முடியவே முடியாது. அவ்வாறிருப்பதனாலேயே திருவள்ளுவரைப்பற்றியும் நாம் ஒன்றுமறியாமல் இருக்கின்றோம். உப்பக்க நோக்கி.........என்னும் செய்யுள் திருவள்ளுவருக்கு வாழ்க்கைத் துணையாய் அமைந்தோரின் சிறப்புப் பெயரை மாத்திரம் எடுத்துக் கூறுகின்றது. 'நப்பின்னையை மணந்த கண்ணன் வட மதுரைக்கு ஆதாரம்; மாதானு பங்கியுடன் கூடிய திருவள்ளுவர் தென் மதுரைக்கு ஆதாரம்' என்பதே அப் பாட்டின் சாரம். மாதானுபங்கி (தாயைப் போன்ற ஒழுங்கினர்) என்ற சிறப்புப் பெயரைத் திருவள்ளுவரின் மனைவியார் பெற்றிருந்தார் என்பது இதிலிருந்து வெளியாகிறது. அறிஞர் அவரை வாசுகி என்ற இயற் பெயரால் அழைப்பர்.

பிறப்பாற் குலங்கொள்ளத் தொடங்கிய பிற்காலத்தார் சிலர், தமிழ்ப்புலவர்களைப் பெருமைப் படுத்தமுன்வந்தனர். இழிக்குலத்திற் பிறந்தவரும் கல்வியால் உயர்வுடையவராம் என்பதையே அடிப்படையாக் கொண்டனர். புலவர்களை அவதார புருஷர்களாகவும், அற்புதங்களை இயற்றினோராகவும் கற்பனை செய்து காட்டினர். அவருள் ஒரு கூட்டத்தினர், ஒளவையை முதலாகவும் திருவள்ளுவரை ஈறாகவுங் கொண்ட ஏழு புலவர்களைச் சேர்த்து ஒரு கதை கட்டினர். பல்வேறு காலத்தவரான அவர்களை எல்லாம் ஒருதாய் வயிற்றுதித்த உடன்பிறப்பாக்கினர். இழிந்த பறைச்சி வயிற்றில் அவர்கள் அவதரித்த தோஷ நீக்கத்துக்காகப் பிராமணனைத் தந்தையாக்கினர்.

## ஆதிபகவன்

'அகரமுதலஎழுத் தெல்லாம்....' என்னுங் குறளில் வரும்

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

# முருகன் கை வேல்

— முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி —
[ இலங்கைப் பல்கலைக்கழகம் ]

போரென்று மன்பதை பொன்னுயிர் மாய்த்திடும்
பூமியை யாள்பவர் வேல்—கொடுஞ்
சூரென்று மும்மலக் கோட்டை யழித்திடும்
தூய முருகன்கை வேல் 1

ஞாலத்தி லன்பை யழிக்க முனைந்திடும்
நாட்டினை யாள்பவர் வேல்—மக்கள்
மாலைத் துடைத்தொளி யாலன்பு கூட்டிடும்
மாமயில் வீரன்கை வேல். 2

மக்களுக் குட்பகை மூள வழிசெய்யும்
வையக மாள்பவர் வேல்—பண்பு
மிக்க வுறவு நிலைகொள்ளச் செய்திடும்
வெற்றி முருகன்கை வேல். 3

குருதி படிந்தச்சங் கொண்டிடச் செய்யும்
குவலய மாள்பவர் வேல்—கனியும
பரிவு படிந்துசெந் தண்மை பரப்பிடும்.
பாவகி சீர்மலி வேல். 4

பசியும் பிணியும் மிடியு மளித்திடும்
பாருல காள்பவர் வேல்—நல்
இசையும் நலனும் வளமு மளித்திடும்
எங்கள் முருகன்கை வேல். 5

எங்கும் அமைதி யிலாமற் குலைத்திடும்
இப்புவி யாள்பவர் வேல்—இன்பந்
தங்கி யமைதி தழைத்திடச் செய்திடும்
சாந்த மணிக்குகன் வேல். 6

ஆறுத லின்றி அலைந்தோடச் செய்யும்
அவனியை யாள்பவர் வேல்—எங்கும்
ஆறுதல் காட்டி யருட்பதம் கூட்டிடும்
ஆறு முகவன்கை வேல். 7

கானரத்தினம்

## வி. வி. சடகோபன்

### யாழ்ப்பாணம் விஜயம்

கானரத்தினம் வி. வி. சடகோபன் பி. ஏ. அவர்கள் தமது கோஷ்டியுடன் அடுத்த மாதம் முற்பகுதியில் விமானமார்க்கமாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கின்றார். வல்லுவெட்டித்துறையில் உள்ள சிதம்பரவித்தியாலயத்துக்காக ஸ்ரீசடகோபன் அவர்கள் ஓர் உதவிநிதிக் கச்சேரி நடாத்துவார். ஸ்ரீ சடகோபனின் அமுதகானத்தை அனுபவிப்பவர்களுக்கு அவருடைய இன்னிசைக் கச்சேரி அரிய விருந்தாகவே யிருக்குமென்பதற்குஐயமில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் சங்கம்

## சமாதானத்துக்கு அவசியமா?

ஐக்கியநாடுகளின் ஸ்தாபனம் அவசியமாவென்று யோசிக்கும்போது அவசியம் என்றே முடிவுகட்டுகிறோம். இம் முடிவிற்கு வருவதற்கு என்னகாரணமென்று பார்த்தால், உலகத்தில் நிரந்தர சமாதானத்தையும், சமூகம், பொருளாதாரம், கலாசாரம், கல்வி முதலியவற்றையும் உலகிறகே ற்றவாறு அமைக்கவேண்டிய தின்பொருட்டே இந்த ஸ்தாபனம் வேண்டுமென்பதுதான் தக்ககாரணமாகும். மேற் சொன்ன வேலைகளைச் சரியாக உருவாக்கவேண்டுமானல், உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களின் கூட்டுறவும் அவசியமாகும். இந்தக் கூட்டுறவின் அடிப்படையில் தோன்றியது தான் ஐ. நா. ஸ்தாபனமாகும். உலகததில் நிரந்தரமான சமாதானத்தைத் தோற்றுவிக்கவேண்டியது அவசியமென்று .எல்லா தேசங்களும் நன்குணர்ந்துகொண்டிருக்கின்றன. நிரந்தர சமாதானத்தை இந்த ஸ்தாபனம் எந்த விதத்திலாவது ஏற்படுத்துமென்பது நமது தீர்க்கமான நம்பிக்கையாகும். சமாதானம் என்பது மிகச்சிறந்த இலட்சியமென்றே கூறவேண்டும். சென்ற நூற்றூண்டிலிருந்தே இந்த உன்னத இலட்சியத்தை உலகமெங்கும் பரப்ப ஒவ்வொருதேசமும் வெகுவாக விரும்புகின்றன. ஆனல் இதே சமயத்தில் பெரியவலலரசுகள் நாடுபிடிக்கும் ஆசையைக் கைவிடமனமில்லாமலும் இருந்து வருகின்றன. இந்த ஆசையை வெளிப்படையாகக் கூறமுடியாவிட்டாலும், மறைமுகமாக வெளியிட எந்த வல்லரசும் தயங்குவதில்லை.

ஆகையால் சமாதானம் — ஆக்கிரமிப்பு என்ற கூட்டு அடிப்படையிலிருந்தே இது வரையில் மூன்று ஐ. நா. சபைகள் தோன்றியிருக்கின்றன.

### விந்தையானது

முன்னர் நிலவிய இரு ஐ. நா. சபைகளும் உலகத்தில் நிரந்தர சமாதானத்தைத் தோற்றுவிக்க முடியாமற் போனதுடன், இரண்டு பெரிய உலகமஹாயுத்தங்களைச் சிருட்டித்துவிட்டன. இரண்டாவது உலகமஹாயுத்தம் முடிந்ததும்,

...... தராசு ......

சமாதானத்தைத்தோற்றுவிக்க வேண்டுமென்ற கருத்துடன் தான் இன்றுள்ள ஐ. நா. ஸ்தாபனம் மூன்ருவது முறையாக ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இன்றைய ஸ்தாபனமும் சமாதானத்தைத் தோற்றுவிக்க முடியவில்லையென்றே சொல்லவேண்டும். இத்துடனில்லாமல், அடுத்தபோருக்கும் விதைவிதைத்துவிட்டது. சமாதானத்தைத் தோற்றுவிக்க வேண்டும்என்ற கருத்துடன் அமைக்கப்பட்ட ஸ்தாபனம் சமாதானத்தை ஏற்படுத்த முடியாமல் போனதுடன் யுத்தத்தை தோற்றுவிக்க முயலுவதுதான் விந்தையாகும். மேலும் சமாதானத்தில் கண்ணும்கருத்துமாக இருக்க வேண்டிய இந்த ஸ்தாபனம் இதுவரையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்குண்டான வழியைக்கூட இன்னும் கண்டுபிடிக்காமலிருப்பது விந்தையிலும் விந்தையே. இரண்டு தடவைகளிலும் சமாதானத்தை ஏற்படுத்த முடியாதஇந்த ஸ்தாபனம் மூன்ருவது முறையிலாவது சமாதானத்தைத் தோற்றுவிக்காதாவென்றுநாம் எதிர்பார்ப்பது நியாயமோ இக்கருத்தை எல்லாத்தேசங்களும் ஒப்புக்கொண்டாலும்கூடஇந்த ஸ்தாபனத்தைப்பற்றி சந்தேகிக்காமலிருக்க முடியவில்லை.

### வல்லரசுகள் சாதனம்

சமாதானம் என்ற போர்வைக்குள் பலாத்காரம், ஆக்கிரமிப்பு எனற கொள்கைகளுடன் கூடின பெரிய தேசங்கங்கள் தான் இந்த ஸ்தாபனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. யுத்தமும் இத்தேசங்களிடையேதான் நடைபெறுகின்றன. போட்டிகளும் இத்தேசங்களிடையேதான் காணப்படுகின்றன. எப்படியிருந்த போதிலும யுத்தமானது வெற்றிதோல்வியில்லாமலேயே முடிந்துவிடுகிறது. பெரிய வல்லரசுகள் இந்த ஸ்தாபனத்தை ஆதாரமாகக்கொண்டே தன்னுடைய ஆசைகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்கு வசதியிருப்பதால் ஒவ்வொரு தடவையும் இம்மாதிரியானஸ்தாபனத்தை வல்லரசுகள் ஏற்படுத்துகின்றனவென்று நாம் தீர்மானம் செய்ய வேண்டியிருக்கிறது. நாடுகொள்ளும் ஆசையில்லாத தேசங்களைக் கூட ஏதாவதொருவிதமான தந்திரத்திஞல் தன்னுடைய வலையில் சிக்கவைக்கப் பெரிய வல்லரசுகள் முயன்று வருவதையும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்; பெரிய தேசங்களின் ஆசைகள் இந்த ஸ்தாபனத்தின் மூலம் பூர்த்தியாகக் கூடுமென்று பலா சந்தேகிப்பதைக் கவனிக்காமலிருக்க முடியாது.

### பகை வளர்தல்

பகையிலிருந்து பகைவளர்வது போலப் பலாத்காரத்திலிருந்தும் பலாத்காரந்தான் வளருகிறது. இரண்டு பெரிய யுத்தங்களின் மூலம் நாம் தெரிந்துகொண்ட உண்மையும் இதுதான். சரித்திரமும் இதைத்தான் நமக்கு அறிவிக்கிறது. பகையையும் பலாத்காரத்தையும் அகற்ற வேண்டியதற்காகத் தோன்றியுள்ள ஐ. நா. ஸ்தாபனத்தில் பகைக்கும், பலாத்காரத்துக்கும் இடமளிக்கப்பட்டிருப்பதை நாம் கூர்ந்து கவனிக்கும்போது, சமாதானத்தை வாயளவிற் கூறிக்கொண்டும் ஆதிபத்ய எண்ணத்தை உள்ளடக்கிக் கொண்டும்வாய்க் கூச்சல் போடும் ஒரு கூட்டம்தான் ஐ. நா. ஸ்தாபனம் என்று கூறவேண்டியிருக்கிறது. ஐ. நா. ஸ்தாபனத்தின் அடிப்படை சாஸனத்தில் எழுதப்பட்டிருக்கும் 'இனவேற்றுமையை அகற்றவேண்டும்' என்பதை ஐ. நா. ஸ்தாபனம் கௌரவிக்க முன்வரவில்லை. இல்லாவிட்டால் தென் ஆபிரிக்கா, போன்ற இடங்களில் தோன்றியுள்ள கலகங்களை பார்த்துக்கொண்டும் சும்மா இருக்க இச்சபை விரும்பலாமா வென்று கேட்க வேண்டித்தானே இருக்கின்றது.

### சக்தியற்றசபை

பாலஸ்தீனத்திலோ ஓயாத தொல்லை. அதைத் தடுக்க ஐ. நா. ஸ்தாபனம் உருவான திட்டத்தை மேற்கொள்ளவில்லை. போர்வின் தகராறு என்று கூறும்போது ஐ. நா. ஸ்தாபனம் தன் செவிகளை மூடிக்கொள்கின்றன; இன்னும் எவ்வளவோ தொல்லை இதைப்பற்றி இந்த ஸ்தாபனத்திடம் கூறிஞல் என்ன பயன் கிட்டுமென்பது நாமறிந்ததே; இம்மாதிரியான சிக்கலான விஷயங்களில் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சக்தியில்லாத ஒரு சபை உலகத்தில் இருக்கவேண்டிய தவசியமாவென்று கேட்பது நியாயமே. உலகத்தில் தோன்றுகின்ற துன்பங்களை அகற்றுவதற்குத்தான் இச்சபை இருக்கிறது. இந்தச் சபைக்கு எந்தப் பிரச்னையையும் கவனிக்கும் சக்தியிருப்பதாக சாஸனம் கூறுகின்றது; ஆனல் அந்தச் சக்தியை உபயோகப்படுத்துவதற்கு வல்லரசுகளின் ஆதரவு அவசியமாகிறது. வல்லரசுகளின் போக்கிற்கு விரோதமாக இந்தச் சபை எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாது; இந்தச் சபையின் அமைப்புத்தான் இதற்குக் காரணமாகும். மேற்கத்திய நாடுகள் ஆசிய நாடுகளுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொடுக்க இந்தச்சபை தயங்குவதின் மூலம் ஆசியநாடுகளுக்காக தனியானதொரு ஐ. நா. ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டுமென்ற யோசனையைப் பலர் கூறுகிறார்கள். இரண்டாவது சபை ஒன்று இன்றைய நிலையில் ஏற்படுமேயானல் உலகமானது இரண்டு பாகமாகவே காட்சியளிக்குமென்பதில் ஐயமில்லை; இச்செய்கை நன்மையைத் தரமுடியுமா, அல்லது தீமையைத் தோற்றுவிக்கக் கூடுமாவென்று அனுவசியமாக ஆராயப்படவேண்டியதொன்றாகும்.


உலகமெங்கும் பசிப்பிணியானது பரவியிருக்கும் இந்தச் சமயத்தில் ஐ. நா. அரசியல் சிக்கல்களில் மூழ்கிக்கிடக்கிறது. அரசியலுக்கு ஓய்வு கொடுத்து விட்டு, சமாதானத்தைத் தோற்றுவிப்பதற்கும், பஞ்சத்தைப் போக்குவதற்கும் இந்தச்சபைஉடனடியாகவேலை செய்தாக வேண்டும். ஐ. நா. ஸ்தாபனமானது வலுவில்லாத ஸ்தாபனமாக இருந்தபோதிலும், இம்மாதிரியான ஒரு ஸ்தாபனம் இருப்பது இன்றையசர்வதேசநிலைமைக்கு மிக அவசியமாகும். இச்சபையின் இன்றைய போக்கானது நமக்குப் பிடித்தமில்லாதிருக்கலாம், இருந்தபோதிலும் இச்சபையின்மூலம் ஒரு சில நன்மைகள் இருப்பதையும் நாம் கொஞ்சம் கவனிக்கவேண்டும்.

### மகத்தானசேவை

உலகத்திலுள்ள பல்வேறு தேசங்களின் மாறுபட்ட கருத்துகளை எடுத்துரைப்பதற்கும், சர்வதேசக் கூட்டுறவை நிலவச் செய்வதற்கும் ஒவ்வொரு தேசத்திலுமுள்ள மக்கள், அன்னிய தேசங்களைப்பற்றித் தெரிந்து கொள்வதற்கும் இந்த ஸ்தாபனம் மிக்க பயனுள்ளதாக இருப்பதை நாம் போற்றவேண்டும். சமூகம்,பொருளாதாரம்,கல்வி, கலாசாரம் போன்ற விஷயங்களில் இந்தச் சபைசெய்யும் சேவையானது மகத்தானதென்றே கூறவேண்டும். இந்தச் சபையானது அவசியமில்லையென்று கலைக்கப்படுமேயானல், நிச்சயமாக மனிதர்களின் முன்னேற்றம் தடைப்படக்கூடும். பின்னேறவும் நேரிடலாம். அதன்பிறகு முன்னேற எவ்வளவு காலம் தேவையாகுமென்பதை இப்பொழுது வரையறுத்துக் கூற முடியாது. ஐ. நா. சபையின் ஆக்கிரமிப்புக்கு இடமளிக்கும் தீர்மானங்களும் கூட்டங்களும் இடம்பெற்றிருக்கலாம். நிரந்தர சமாதானத்தைத் தோற்றுவிக்கமுடியாத சூழ்நிலையில் அகப்பட்டுக் கொண்டுமிருக்கலாம். நியாயம் வழங்குவதிலேதவறு செய்யலாம். இதற்கெல்லாம் வல்லரசுகள்தான் காரணமாக இருக்க முடியும். சபையின்மேற் குறை கூற முடியாது. ஆகையால் நியாயமான முறையில் இந்தச்சபை வேலை செய்ய வேண்டுமானல் இந்தியா, இலங்கை போன்ற தேசங்கள் விசேஷ கவனம் செலுத்தவேண்டும். இச்சபையின் நிர்வாக விஷயங்களில் முக்கியப் பொறுப் பேற்க வேண்டும்.

ஆசிய நாடுகளுக்காக ஒரு தனியான சபை ஏற்படுத்துவதென்பது முதற்சபையின் நல்ல வேலைகளிற் குறுக்கிடுவதுபோலாகும் இரண்டு சபைகளும் உருவாகஒன்றும் செய்யமுடியாமல்போய்விடக்கூடும். ஆசிய நாடுகளின் குறைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமானல், தேவையுள்ள போது ஆசியநாடுகளின் மகாநாட்டைக்கூட்டி தனது நியாயமான முடிவை ஐ. நா. ஸ்தாபனத்துக்குத் தெரிவித்து பரிகாரம் தேடுவதுதான் விவேகமான செய்கையாகும். எக்காரணத்

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)



தேக மலர்ச்சி

அவளுக்கு உற்சாகத்தையும் நம்பிக்கையும் அளிக்கின்றது

மறுபடியும் அவளே அவள் கோஷ்டிக்கு தலைவியாக்கினர்கள். அவளுடைய உற்சாகமும், நம்பிக்கையும் எல்லோரும் அவளே விரும்பி புகழும்படி செய்கின்றது. அவள் தினம் லைப்பாயினுல் குளிக்கின்றுள். அதனுடைய செழிப்பான இளைப்பாற்றுகிற நுரை அவளுடைய சருமத்தின் துவாரங்களினுட்சென்று, அவளுக்கு ஊக்கத்துடன் மகிழ்ச்சிதரும் தேக மலர்ச்சியையும் கொடுக்கின்றது.

லைப்பாய் மற்ற டாய்லட் சோப்புகளை காட்டிலும் 20% காரம் குறைந்தது. அதனுலேயே முகம் கைகளை கழுவ மிகச்சிறந்தது.




அதனுல் தான் அவள் உபயோகிப்பது

லைப்பாய் டாய்லட் சோப்

L. 22-169 TM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக் களஞ்சியம்

சென்னை, தமிழ்வளர்ச்சிக் கழகத்தினர் வெளியிடவிருக்கும் கலைக்களஞ்சியம் என்ற பெரு நூலின் மாதிரிப் பிரதி எமது பார்வைக்கு 20-12-48-ல் அனுப்பப்பெற்றது. இப்பிரதியே மூதலாவதாக இலங்கையை வந்தடைந்தது. தமிழில் இதுவரை நடைபெருத ஒரு பெரிய முயற்சிபற்றி எமது கருத்துக்களைச் சிறந்த முறையில் வெளியிடவேண்டுமென்ற காரணத்தினுற்ருன் இவ்வளவு தாமதம் ஏற்படலாயிற்று. கலைக் களஞ்சியம் மாதிரிப் பிரதியைப் பார்வையிட்டுள்ள ஸ்ரீ சு. நடேசபிள்ளை பி. ஏ. பி. எல்., எவ். ஆர். ஈ. எஸ். அவர்கள், யாழ்ப்பாணம்—பரமேஸ்வரக் கல்லூரியின் அதிபராவர். முத்தமிழ்ப் புலமையும், ஆங்கில அறிவும் நிரம்பப்பெற்றவர். தமிழ் இலக்கியப் பண்பாட்டுக்குப் பெரிதும் உரிமை பூண்டவர். அன்னாரின் கருத்துக்களை இலங்கைத் தமிழ் மக்களின் அபிப்பிராயமாகத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் உவந்தேற்றுக் கொள்ளலாம். எமது வேண்டுகோளுக் கிணங்கி இப்பணியில் ஈடுபட்டுள்ள தமிழ்ப் பேரறிஞரான ஸ்ரீ நடேசபிள்ளை அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்ரேம்.

— ப. ர்.

சென்னைக் கல்வி மந்திரியின் ஆதரவிற் சில மாதங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழ் நாட்டில் இதுகாறும் செய்யப்படாத ஒருசிறந்த பணியை ஆற்ற முன்வந்துள்ளது.

பல கலைகளைப் பற்றித் தமிழ் மக்கள் தம் மொழிவாயிலாய் ஒருவாறு அறிந்து கொள்ளத்தக்க முறையில்; **கலைக் களஞ்சியம்** என்ற ஒரு பெரும் நூலைப் பத்து அல்லது பன்னிரண்டு பாகங்களில் வெளியிடுதற்கு இக்கழகம் முயற்சித்து வருகிறது. இக்கழகத்தின் நோக்கம் நிறைவேறுமாகில், இம்முயற்சி தமிழ் மொழிக்கு ஒரு பேராக்கத்தைத் தேடி வைப்பதாகும். ஆதலின், **கலைக் களஞ்சியம்** விரைவில் உருப்பெற்றுப் பயனளிக்க வேண்டுமென்று தமிழகம் விழைந்து நிற்கின்றது.

கலைக்களஞ்சியத்தின் மாதிரிப் பிரதியாக இருபது பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகம் பல அழகிய சித்திரப் படங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது. இதைப் பார்வையிட்ட பிறகு எமக்குத் தோன்றிய சில கருத்துக்களை இங்கு வெளியிடுகின்ரேம்.

உலகத்திற் பிரதான மொழிகளாக இக்காலத்தில் விளங்கும் ஆங்கிலம் முதலான மொழிகளில் பல்கலைப் போகராதிகள் பல ஆண்டுகளுக்கு முன்னரே வெளிவரத் துவங்கின. ஆங்கிலத்திலுள்ள என்சைக்கிளோப்பீடியா பிரிட்டானிக்கா என்ற பல்கலைப் போகராதி புலமையிற் சிறந்த பல அறிஞர்கள் எழுதிய கட்டுரைகள் தாங்கி உலகப் பிரசித்தம் பெற்று விளங்குகிறது. ஆங்கில மொழியில் விஞ்ஞான சாத்திரப் பரப்பு விரிந்துகிடக்கின்றது. பல கலைகளைப் பற்றி அம்மொழியில் அறிந்துகொள்வது எளிதாயிருக்கிறது. அம்மொழியின் சொல்லாக்கம் இவற்றிற்கெல்லாம் இடங்கொடுக்கும் நிலையிலுள்ளது.

## ஆரம்ப முயற்சி

நம் தமிழ்மொழியில் நவீன விஞ்ஞான சாத்திரங்கள் விரிவாக இன்னும் எழுதப்படவில்லை. ஆனல், இத்துறையிற் சில ஆரம்ப முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. விஞ்ஞான சாத்திரங்களில் வழங்கப்படும் பரிபாஷைச் சொற்களைத் தமிழில் எவ்வாறு ஆள வேண்டும் என்ற ஆராய்ச்சி இன்னும் தமிழ் நாட்டில் ஒரு முற்ருன முடிவுக்கு வந்திலது. இது தமிழில் விஞ்ஞான சாத்திர வளர்ச்சிக்குப் பெருந் தடையாயிருக்கிறது. இக்குறையை நீக்க வேண்டிய பொறுப்பு இப்பொழுது **கலைக் களஞ்சியத்தின்** பதிப்பாளர்கள்பால் சார்கின்றது. இத்துறையிற் கலைக் களஞ்சியம் தமிழ்மொழிக்கு அருந்தொண்டு ஆற்றுவதற்கு இது தக்க தருணமாகும். கலைக் களஞ்சியத்தின் பொறுப்பாளர்கள் இதைத் தம் முதற் கடமையாகக் கருதி இதற்காவன செய்வார்களென்று எதிர்பார்க்கிரேம்.

கலைக் களஞ்சியத்துக்கு விஞ்ஞான சாத்திர சம்பந்தமான கட்டுரை எழுதுபவர்கள் பலராக இருப்பதால், அவரவர் தம் எண்ணத்துக்குத் தக்கவாறு விஞ்ஞானச் சொற்களைப் பிரயோகிப்பார்கள். இதைக் கலைக் களஞ்சியத்தின் மாதிரிப் பிரதியிலேயே காண்கிரேம். கலைக் களஞ்சியத்தில் விஞ்ஞானச் சொற்கள் வரையறையின்றிப் பலவாருக வழங்கப்பட்டு, கட்டுரை தோறும் வேறுபட்டனவாயிருந்தால், இந் நூலின் அமைப்பு சிதைவதோடு, இனி விஞ்ஞானத் துறையில் தமிழ் வளர்ச்சியெய்துவதற்கு வாய்ப்பாக இருக்கும் இந்நூலினல்

— சு. நடேசபிள்ளை —

அடையக்கூடிய பயனைத் தமிழகம் இழந்துவிடவும்கூடும்.

## இயல்பான ஆற்றல்

சில ஆண்டுகளுக்குமுன், திரு. இராஜகோபாலாச்சாரியார் சென்னையில் முதன் மந்திரியாயிருந்த காலத்தில் அவரது ஆதரவில், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் தமிழிற் புதுக்கலைச் சொற்களை அமைப்பதற்குச் செய்த முயற்சி இங்குக் குறிப்பிடத்தக்கது. இச் சங்கம் சில விஞ்ஞான சாத்திர அறிஞர்களின் துணையைக் கொண்டு செய்த ஆராய்ச்சியின் பயனுகத் தமிழ்க் கலைச் சொற்கள் என்ற நூலை வெளியிட்டது. ஈழநாட்டுப் புலவரான காலஞ்சென்ற **சுவாமி விபுலாநந்தர்** இச்சங்கத்தின் முயற்சியில் ஈடுபட்டுச் சிறந்த பணியாற்றினர். இச் சங்கம் வெளியிட்ட நூலுள் பல விஞ்ஞான சாத்திரப் பரிபாஷைச் சொற்களுக்கு முற்றும் தமிழடியாகப் பிறந்த ஈட்டுச் சொற்கள் தரப்பட்டிருக்கின்றன. புதுக் கலைச் சொற்களைத் தமிழில் ஆக்குதற்குப் போதிய ஆற்றல் தமிழ் மொழிக்கு இயல்பாய் அமைந்துள்ளது என்பதை இந்நூல் தெள்ளிதிற் புலப்படுத்துகின்றது. ஆனல் இந்நூலில் ஒரு குறையும் காணப்படுகிறது. தனித் தமிழிலேயே எல்லாவிதக் கலைச் சொற்களையும் ஆக்க வேண்டுமென்ற நோக்கத்தை இச்சங்கம் கொண்டிருந்தமையால், சிலவிடங்களில் இலேசிலே பொருள் விளங்காத தமிழ்ச் சொற்களை ஆண்டிருக்கிறது. இதுபோன்ற சில குறைகள் இருப்பினும், தமிழ்க் கலைச் சொற்கள் என்ற வெளியீடு கலைக் களஞ்சியத்தின் கட்டுரையாளர்களுக்கும் பதிப்பாளர்களுக்கும் மிகப் பயன்படக்கூடிய நூல் என்று நினைவூட்ட விரும்புகிரேம்.

## பரிபாஷைச் சொற்கள்

இக் கலைச் சொற்களில் பொருத்தமான அநேக சொற்கள் அண்ணமலைப் பல்கலைக் கழகம் தமிழில் வெளியிட்டுள்ள தாவர நூல், பௌதிக நூல் என்ற நூல்களில் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனல் இப் பல்கலைக் கழகம் வெளியிட்ட நவீன அசேதன ரசாயனம் என்ற நூலில் பல பொருத்தமான தமிழ்க் கலைச் சொற்கள் புறக்கணிக்கப்பட்டு, எளிதில் விளங்கிக் கொள்ளவும் இலேசிலே உச்சரிக்கவும் இயலாத அநேக வடமொழிச் சொற்கள் புகுத்தப்பட்டுள்ளன. இதைப்போன்ற வேறு சில விஞ்ஞான நூல்களும் தமிழில் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் தோன்றிப் பின் வழக்கு வீழ்ந்த மணிப்பிரவாள நடைபோன்ற வகையில் விஞ்ஞான சாத்திரங்கள் தமிழில் எழுதப்பட்டால், அவற்றுல் தமிழ் நாடு பயன் அடையாது. தமிழில் வெளிவந்துள்ள வேறு சில விஞ்ஞான நூல்களில் தமிழ்க் கலைச்சொற்களை வழங்கக்கூடிய இடங்களிலும் அநாவசியமாக ஆங்கிலத்திலுள்ளபடியே பரிபாஷைச் சொற்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இக் குறைபாடுகளை விலக்கித் தமிழ் வளர்ச்சிக்குப் பொருத்தமான முறையிற் பரிபாஷைச் சொற்களைக் கலைக் களஞ்சியத்தில் ஆளுதற்கு, இந்நூலின் பதிப்பாளர்கள் தக்கதுணைகொண்டு முயற்சி செய்தல் அவசியமாகும்.

விஞ்ஞான சாத்திரப் பரிபாஷைச் சொற்களைத் தமிழில் ஆளும் முறைபற்றிச் சில அடிப்படையான கருத்துக்கள் பல அறிஞர்களுக்கு உடன்பாடாயிருக்குமென்று நம்புகிரேம். அவற்றை இங்குக் குறிப்பிடுகின்ரேம்.

1. இயன்றவரையிற் பரிபாஷைச் சொற்களின் பொருளை விளக்கத்தக்க தமிழ்க் கலைச் சொற்களை அமைத்து வழங்குவதே பிரதானமான நோக்கமாயிருக்கவேண்டும்.

2. சிற்சில இடங்களிற் பரிபாஷைச் சொற்களுக்குத் தமிழில் விளக்கத்தக்க சொற்களை அமைக்க இயலாவிடின், அப்பரிபாஷைச் சொற்களை ஆங்கிலத்தில் உள்ளபடியே ஆளலாம்.

3. பரிபாஷைச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களை வழங்க இயலாவிடங்களில், பிரசித்தமான வடமொழிச் சொற்கள் பொருத்தமாயிருப்பின், அவற்றை வழங்கலாம்.

பொதுவாகக் கவனிக்க வேண்டிய விதி ஒன்றுண்டு. தமிழ்மொழியின் இயற்கை ஆற்றலுக்கும், காலகதியிற் சிதைந்தழிந்து போகாத அதன்மரபுக்கும் ஊனமின்றி, இக்காலத்துக்கேற்ற துறைகளில் அதுசிறந்து விளங்குதற்கு ஏற்றவற்றைச் செய்ய வேண்டும். —தொடரும்

---

**வாசகர்களுக்கு**

கலைக்களஞ்சியம் மாதிரிப் பிரதியைப் பார்ப்பதற்கு வாசகர்களில் அநேகர் விரும்புகின்றனர். சனி, திங்கள் வாரங்களிற் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் ஈழகேசரி நிலையத்துக்கு வந்து குறித்த பிரதியைப் பார்வையிடலாம். அத்துடன் கலைக்களஞ்சியம் சம்பந்தமான தமது கருத்துக்களையும் வாசகர்கள் எமக்கு எழுதியனுப்பலாம். அவற்றைக் கூடிய மட்டில் இப்பத்திரிகையிற் பிரசுரிக்க நாம் முயலுவோம். — ப. ர்.

---

# தமிழர் திருவிளக்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதிபகவன் என்ற சொற்றொடரைத் தமக்குத் துணையாகக் கொண்டு தாய்க்கு ஆதி எனவுந் தந்தைக்குப் பகவன் எனவும் திருநாம மிட்டார்கள். இவர்கள் வலையி லகப்படாது தப்பிய கம்பன் நக்கீரன் போன்ரோர்க்கும் இவ்வாருன கதைமாலைகளைப் பிறர் சூட்டினர்கள். தமிழ்ப் புலவர்களைப் பறைச்சிக்கும் பார்ப்பானுக்கும் பிறந்தவராக்குவதே இந்த முற்போக்கு வாதிகளின் விசுவாமித்திர சிருஷ்டி. இவ்வித நோய் தமிழ் நாட்டிலிருந்து மலையாள நாட்டுக்கும் பரவிவிட்டது. மலையாள இலக்கண நூலாசிரியனுன எழுத்தச்சன் என்பாரையும் அம்மலையாள மக்கள் பறைச்சிக்கும், பார்ப்பானுக்கும் பிறந்த பிள்ளையாயே கதை கட்டி உரைக்கின்றனர். இவ்வாறு திருவள்ளுவருள்ளிட் டேழு புலவர்களுக்கும் கதை புனைந்தோர் திருவள்ளுவரை எல்லாச் சாதியாரும் போற்றுவது கண்டு, உயர்ந்த சாதிகள் அனைத்துக்கும் அவர் சேர்ம[illegible] என்ற பாணியிற் [illegible] பெருக்கினர். வேளாள வீடு ஒன்றில் பறைச்சி பெற்ற பிள்ளையை — திருவள்ளுவரை வளரவிட்டனர். முடியுடை வேந்தர்க்கு மணமகளிரை அளிப்போரிடமிருந்து வாசுகியைப் பெற்றனர். வணிகனுன ஏலேலசிங்கனை மாணவனுக்கினர் …… இவ்விதமாகத் திருவள்ளுவரை உயிருடனே சாதி குலங்கள் தோறும் இழுத்துக திரிந்து பல அற்புதங்களை நிகழ்த்துவித்தார்கள். உயிர் நீத்தபிறரும் அவருடம்பைப் புரியிற் கட்டி இழுத்தார்கள். அவ்வுடம்பிலே தீண்டிய சீவனெல்லாம் பொன்னுடம்பு பெற்றுமுத்தியடைந்தனவாம்.

## புலவர் பெருமான்

நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவரைப்பற்றி இவ்வித ஆபாசமான செய்திகள் தமிழகத்தில் மலிந்து கிடப்பதை நினைக்குந்தோறும் தமிழன் இதயம் வேகுகின்றதே; எந்தத் தமிழிரத்தந்தான் கொதியாதிருக்கும். தமிழகத்தில் மண்டிக்கிடந்த குழந்தையைக் கண்கவர் வனப்பும் கட்டழகும் எய்துமாறு, மூப்பாலூட்டி வளர்த்துக் கன்னித் தமிழாக்கி, உலக வீதியில் கலை மணக்கத் தமிழொலிக்க ஈரடி பெயர்த்து நடையழகு காட்டச் செய்த எம் புலவர் பெருமானைப் போற்றுது நாம் ஆண்டு பல போக்கினேம்; போக்குகின்ரேம்; இன்னும் போக்குவோமா?

பள்ளிக்கூடத் தேவைக்கான:

| | | |
|---|---|---|
| தினவரவு இடாப்பு | — | 1-50 |
| லீவு ,, | — | -50 |
| 'Q' செடுல் சேட்டிபிக்கற் புத்தகம் | | 1-00 |
| தவணைப்பரீட்சை இடாப்பு | (சிறியது) | 2-50 |
| ,, | (பெரியது) | 3-50 |

விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

[illegible] புத்தகசாலை

## ஐக்கிய நாடுகள் சங்கம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தைக்கொண்டு ஆசிய நாட்டுக்குத்தேவையானதொரு சபை வேண்டுமென்று கேட்கப்படுகிறதோ அத்தகைய குறையை ஐ. நா. ஸ்தாபனம் போக்க முன்வரவேண்டும். எந்த நியாயமான காரணத்திற்காக தனியானதொரு சபை வேண்டுமென்று கேட்கப் படுகிறதோ இந்த அடிப்படையைப் புது சபையின் அமைப்புத்தகர்த்துவிடக்கூடும்; இது இராஜ தந்திரத்தின் மூலம் சொல்லும் முடிவாகும். புதிய சபையினுல் சர்வதேச நிலமைகளில் பல சிக்கல்கள் தோன்றுவதோடு சமாதானத்தைத் தோற்றுவிக்க முயலுவதாய் நினைத்துக் கொண்டு புதிய விரோதத்தை சம்பாதித்துக்கொள்ளநேரிடும்

ஐ. நா. ஸ்தாபனம் அரசியற் சிக்கல்களை உதறித்தள்ளிவிடமுடியாவிட்டாலும், கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டு நிர்மாணவேலைகளை திட்டமிட்டுப் பரப்ப முயல வேண்டியது மிக அவசியமாகும். மேலும் இதுதான் இச்சபையின் கடமையுமாகும். கடமையை உணர்ந்து இந்தஸ்தாபனம் வேலைசெய்யமுன்வருமேயானல் ஐ. நா ஸ்தாபனம் அவசியமாவென்ற கேள்வியே எழமுடியாதென்று கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

கஅ ஆனுகம், சர்வதாரி, மாசி கரு

— சாத்தி ஆண்டு 80 —


## ஒவ்வாத கல்விமுறை

இலங்கை அரசினரின் ஒவ்வாத கல்விமுறையின் காரணமாக, நாட்டிற் பெருந் தீமைகள் ஏற்பட்டு வருகின்றனவென்றே கூறவேண்டியிருக்கிறது. வருடா வருடம் கல்விகற்றுத் தேறி உத்தியோகத்தை நாடும் மாணவர் தொகை ஆயிரக்கணக்காகும். இவர்கள் கல்விக்கேற்ற உத்தியோகங்களைக் காணோம். எல்லாரும் இலிகிதர் பதவிக்கன்றி வேறு எப்பதவிக்கும் உதவார். இப்போதைய கல்வியின் பெறுபேறு இப்படியிருக்கின்றது. தொழிற் கல்விக்குப் பிரதம இடம் அளிக்கவேண்டுமெனப் பன்முறை எடுத்து விளக்கப்பட்டும், அரசினர் இத்துறையில் ஒன்றுஞ் செய்து முடித்தாரில்லை. இதுவரையில் அக்கல்வியைக் கற்றுக்கொடுக்க ஆக நான்கு வித்தியாசாலைகள் தான் அமைக்கப்பட்டுள. அவை தானும் விரும்பியபடி தொழிற்படுதற்குப் போதிய உபகரணங்களின்றித் தடுமாறுவதாக அறிகின்றோம்.

கல்விகற்கும் மாணவர்கள் எல்லோருக்கும் அரசினர் உத்தியோகம் பெறுவதென்பது எப்படிக் கூடும். ஏற்ற முறையிற் கல்வியைப் பயிற்றும் பொறுப்பினை அரசினர் ஏற்கலாமேயன்றிக் கற்போர் யாவருக்கும் உத்தியோகம் பெறும் பொறுப்பும் அரசினரின் வேலையாக இருப்பதெப்படி? ஒரேவிதமான கல்வியைக்கற்றுக் கொடுப்பதாலேயே இவ்வாறு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுவதாயிற்று. மேலும் மாணவர் அரசாங்க உத்தியோகத்தை இலக்காகக்கொண்டு கல்வி கற்கும் மனப்பான்மையும் நீங்கவேண்டும். கற்ற கல்விக்கேற்ப உத்தியோகத்தைத் தேடவோ அல்லது ஒரு தொழிலை நடத்தவோ மாணவர் வழிகாண்பதே முறை. அரசினர் எல்லாஞ் செய்து முடிப்பாரென எண்ணுவதாலேயே இச்சங்கடங்கள் வந்தெய்துகின்றன. வாழ்க்கைக்குப்பொருள்தேடக்கூடிய வழிகள் எத்தனையோ உள. வியாபாரம், கைத்தொழில், கமத்தொழில் என்னுந் துறைகளில் விசேஷ அறிவுடன் ஈடுபடின், பெரிய பயனை அடையலாகுமே. இத்துறைகட்கு ஏற்ற கல்வியை அரசினர் கற்றுக் கொடுப்பதில் இப்போது காலந் தாழ்க்காது முன்வரவேண்டும். மாணவராகவுள்ளோரும் தமது பழைய பிழையான நோக்கங்களை மாற்றிப் புதிய முறையிற் கல்வியைக்கற்க ஒருப்படவேண்டும்.

இன்னும் சில ஆண்டுகட்குள் இலங்கையின் பொருளாதார நிலை மிக்க பரிதாபகரமாயிருக்கு மென்பது பல விஷயங்களினின்று அனுமானிக்கக் கிடக்கின்றது. பொருளாதார நிபுணர்களின் அபிப்பிராயமும் அதுவே. எனவே, தொழில்முறைக் கல்வியும், தொழில்களை நடத்தும் உத்தியோகங்களுந்தான் நமது நாட்டிற்கு ஆக்கந்தரக் கூடியன. மாணவராவோர் அவைகளை இலக்காகக் கொண்டாலன்றி நம்மை எதிர்த்துவரும் கஷ்டகாலத்தைச் சமாளிக்க வியலாது. மேலைத்தேச நாடுகளில் அரசாங்க உத்தியோகத்திற் பொதுவாக எவரும் மோகங்கொண்டு திண்டாட்டப்படுவதில்லை. தொழில் ஸ்தாபனங்களில் ஈடுபட்டுத் தமது வாழ்க்கைக்கு வேண்டிய பொருளை ஈட்டிக்கொள்கின்றனர். இலங்கை நீடிய காலமாக அந்நிய அரசினரின் கீழ் இருந்தமையால், தொழில் விருத்தியடையாது போனதுமன்றிப் பிழையான மனப்பான்மையும் ஏற்படுவதற்கு ஏதுவாயிருந்தது. இந்தப்போலியான கௌரவத்தில் இனிமேல்வாழலாமென எண்ணுவது பெரிய பிழையாகும்.


எனவே, அரசினர் கல்வியின் பொருட்டு இப்போது செலவிடும் பெருந் தொகைப் பணம் அவமே போகாது பாதுகாக்க வேண்டும். வித்தியாசாலைகளினின்று வெளியேறும் மாணவர் சீவியத்துக்குப் பொருள் தேடக் கூடிய ஆற்றலை அடையச் செய்வதே கற்றுக்கொடுக்கும் கல்வியின் இலக்காக வேண்டும். இலங்கையின் பற்பல பாகங்களிலும் அவ்வவ்விடங்களின் நிலைமையையும் வசதியையும் நோக்கி ஏற்ற தொழிற் கல்வி ஸ்தாபனங்கள் அமைப்பது அரசினர் கடமையாகும். அத்துடன் தொழிற் கல்வியைக் கற்றுத் தேறும் மாணவர்கள் பல்வேறு கைத்தொழில்களை நடத்தற்கு வேண்டிய ஆதரவை யளிப்பதும் அரசினர் கடனாகும். இவ்விஷயத்தில் அரசினர் அளவுகடந்த ஊக்கமெடுக்க வேண்டும். இப்போது என்ன செய்வதெனெ அரசினரும் அறியார். கல்வி கற்கும் மாணவராவது அவர்கள் பெற்றோராவது அறியார். எதற்குமுதவாத நோக்கமற்ற கல்வியைக் கற்றுவிட்டு, உத்தியோகத்துக்குத் திண்டாட்டப்படுவதே வழக்கமாய்விட்டது. இனியாவது அரசினர் கல்வியின் நோக்கினை வரையறுக்க வேண்டாமா? எந்த எந்தக் கல்வி எந்த எந்த மாணவர்க்கு ஏற்றதோ அதை நன்கு கற்றுக்கொடுப்பின் ஈடாட்டம் ஏற்பட வேண்டியதில்லை. எவரிலும் தங்கியிராது மாணவன் வாழ்க்கைக்கு வழிகாண்பான். அரசினரும் நெருக்கடியின்றித் தமது கடமையைச் செய்து செல்லலாம்.

## எப்படிப்பொருந்துமோ?

புத்தகயா ஆலயத்தின் பரிபாலனம் முற்றாகப் புத்தர்களின் பொறுப்பில் வரவேண்டுமென்று மகாபோதிச் சங்கத்தினர் மிக நெருக்கி வாதிக்கின்றனர். இதுவரையும் ஒரு இந்து மடாதிபதியாற் பரிபாலிக்கப்பட்டு வந்த இந்தப் புத்தாலயம் இப்போது ஒரு அதிகார சபையினர் பொறுப்பிலவிட ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. இந்தச் சபையில் நான்கு இந்துக்களும் நான்கு புத்தர்களும் ஒரு தலைவரும் உளர். தலைமை வகிப்பவர் இந்துக் கனவானாக இருப்பார். இந்தச் சபையில் தமக்கு நம்பிக்கை இல்லையென்கின்றனர். புத்தகயாவில் வணக்கஞ் செய்வோரிற் பெரும்பான்மையோர் இந்துக்கள் என்பதை இம் மகாபோதிச் சங்கம் மறந்துவிட்டது போலும். இந்தியாவில் புத்த சமயம் இந்துசமயத்துக்குப் புறம்பானவோர் சமயமாகக் கருதப்படுவதில்லை. புத்தர்களும் இந்துக்களும் தங்கள் சமய விழாக்களிற், கொண்டாட்டங்களில் மிக நெருங்கிக் கலந்துகொள்வர். எனவே, இந்த ஆலய பரிபாலனத்தில் இவ்வளவு புகார் கிளப்ப வேண்டிய காரணம் யாதோ? இவ்வாறு புத்தகயா ஆலயம் முற்றுமுழுதாகத் தம்முடைய சொந்தப் பரிபாலனத்தில் விடப்படவேண்டும் என வாதிக்குங் கட்சியினர், இலங்கையிலுள்ள கதிர்காமத் தேவாலயத்தை இந்துக்கள் பொறுப்பில் விடச் சிறிதும் விரும்பாதது பெரிய நூதனமாகின்றதே. இந்துக்களுடைய ஆலயத்தைப் புத்தர்களாகும் சிங்களர் பரிபாலிக்கலாம்; ஆனல் புத்தர்களின் ஆலயமாகும் புத்தகயாவைப் பரிபாலிப்பதில் இந்துக்களுக்குப் பங்கு இருக்கக்கூடாதாம். இது எப்படிப் பொருந்தும்? தமக்கொரு நியாயமும் பிறர்க்கொரு நியாயமும் கூறுவது அழகாகுமா? மேலும் புத்தகயாவைப் பரிபாலிக்கும் இந்துக்கள் புத்த சமயத்துக்கு மாறாக எதுவுஞ் செய்கின்றாரா? இவ்விஷயமாக அளவு கடந்த விரோதமும் பகையும் எழுப்புவது உசிதமன்று. பிஹார் மாகாண அரசினர் இவ்விஷயமாக ஏற்ற ஒழுங்குகள் செய்துள்ளனர். அவைகளை மகாபோதிச் சங்கத்தினர் ஏற்றுத் திருப்தியடைவதே முறை. வீண் வாதங்களாலும் கிளர்ச்சிகளாலும் ஒரு பயனுமில்லை. மேலும் இலங்கையில் தாம் செய்ய விரும்பாத ஒரு விஷயத்தை இந்தியாவில் இன்னொருவர் செய்வாரென எண்ணுவது எப்படிப் பொருந்துமோ?

## கலைக்களஞ்சியம்

ஒரு பாஷை சிறப்படைதற்குப் பல்வேறு கலைகளைப்பற்றிய விரிந்த நூலொன்று அப்பாஷையில் இருத்தல் அவசியம். ஆங்கிலம் முதலிய மேலைத்தேச பாஷைகளில் இவ்வித நூல்கள் சிறந்து விளங்கக் காணலாம். தமிழ்ப்பாஷையிலும், இவ்வித நூலொன்று ஏற்படுவது அவசியமென்பதை எவரும் ஆர்வத்துடன் ஆதரிப்பர். சென்னைக் கல்வி மந்திரியாரின் விசேஷமுயற்சியால் இந்த அரிய தொண்டினைச் செய்து முடிக்க ஒரு தமிழ்வளர்ச்சிக் கழகம் அமைக்கப்பட்டிருக்கின்றது. வேலை ஆரம்பிக்கப்பட்டு இந்நூலின் மாதிரிப்பிரதியும் வெளிவலாயிற்று. அதில் ஏற்படவேண்டிய திருத்தங்கள் குறைகள் யாவையென்பதை அறிவதுகருதியே இம்மாதிரிப்பிரதி வெளியிடப்பட்டுள்ளது. விஞ்ஞானம் முதலிய எத்தனையோ துறைகளில் இந்நூலிற் கட்டுரைகள் வரவேண்டியிருக்கின்றன. அப்பொழுது உபயோகிக்கப்படும் பரிபாஷைச் சொற்கள் யாவும் ஒரேதன்மையாகவும் ஏற்றதாகவும் இருப்பது அவசியம். சென்னை அரசினர் ஆதரவில் இற்றைக்குச் சில ஆண்டுகட்குமுன்னர் கலைச்சொற்கள் என்னும் நூல் வெளியிடப் பட்டது. இந்த அரிய வேலையில் இராஜாஜி, சுவாமி விபுலாநந்தர் போன்ற பேரறிஞர்கள் ஈடுபட்டு உழைத்தனர். ஆகவே தமிழ்க் களஞ்சியம் எழுதும் கடமையை ஏற்றோர் விஞ்ஞானம் முதலிய துறைகளிற் கட்டுரை எழுதுங்கால் இந்நூலை ஆதாரமாகக் கொள்ளவேண்டும். அதிலும் திருத்தப்படவேண்டியன இருப்பின் அப்படிச்செய்யலாம். ஆனல் கலைக்களஞ்சியக் கட்டுரைகளில் வரும் புதிய ஆக்கச்சொற்கள் பலவிதமாக இருக்காது ஒரேதன்மையாக இருக்கவேண்டுமென்பதே எமது வேண்டுகோள். இவ்விஷயத்தை மேற்படி கலைக்களஞ்சிய அதிகார சபையினர் நோக்கவேண்டும். அத்துடன் இந்தப் பெரிய நூலை எழுதும்பணியை ஏற்றோரின் நாமங்கள் தமிழகத்தார் அறிவது அவசியம். அப்போதுதான் இப்பணி எவ்வாறு ஏற்றமுறையில் நடக்கின்றதென்பதை யாவரும் அறிவர். சென்னை மாகாணத்தார் மாத்திரமன்று இலங்கை, திருவாங்கூர் முதலிய இடங்களிலுள்ளவர்களும் இந்தப் பெரியதொண்டினை நிறைவேற்றுங் கருமத்தில் பங்குபற்றவேண்டும். இலங்கையில் தமிழறிஞர்கள் பலருளர். அவர்கள் ஒத்தாசையையும் இக் கழகத்தினர் பெறுவது அவசியம். இலங்கைப் பல்கலைக்கழகத்தினாதும், அரசாங்க உத்தியோகத்தினாதும் ஒத்தாசைமாத்திரம் போதுமென எண்ணுவது போதாது. புதிதாக அமைக்கப்பெற்ற இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பாஷைக்கு, இன்னும் விரும்பியபடி விசேஷ ஸ்தானம் அளிக்கப்படவில்லை. ஆகவே முற்றாக இதனை இவ்விஷயத்தில் நம்புவது ஏற்றதாகாது. இலங்கையிலுள்ள தமிழ் அறிஞர்களைக் கூட்டி இந்த அரிய கைங்கர்யத்துக்கு உதவி புரியச் செய்யவேண்டும். அப்போதுதான் விரும்பியபடி இந்த நூல் சிறப்புடையதும். இந்தப் பெரிய பணியை ஏற்றோர் இவை யெல்லாம் நோக்கி ஆகவேண்டியதைச் செய்வாராக.




வாழ்க்கையைநடாத்த முடியாது கஷ்டப்படும் ஏழை மக்களுக்கு அரசாங்கம் பிரதி மாதமும் ஒரு சிறுதொகையை உதவி வருகின்றது. கொழும்பு நகரசபையானது கஷ்ட நிவாரண உதவிசெய்வதுடன் விவாகமசெய்துகொள்ளுமு ஏழைப் பெண்களுக்குக் கலியாணத்துக்கான உடை வாங்குவதற்குமு உதவ முன்வந்திருக்கின்றது.

இந்த உதவியை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளுவதற்காக, எத்தனையோ பெண்கள் தங்கள் கணவன்மாரைக் கைவிட்டு வருகின்றார்களாம். அரசனை நமபிப் புருஷனைக் கைவிட்டதுபோல என்று சொல்லுவார்கள். இக கதிக்கு இந்த ஏழைப் பெண்கள் ஆளாகிக் கொள்ளாதிருக்குமாறு கணவன்மார் பிரார்த்திக்கின்றனர்.

❀

### கலியாணப் பெண்கள்

கலியாண உடையை அணிந்து அழகுபார்க்க விரும்பும் எத்தனையோ ஏழைக் கன்னிகள் தங்களுக்கேற்ற காளைகளைத் தேடித் திரிகின்றனர். சில கட்டழகிகள் கிராமத்தையும் விட்டு கொழும்பு நகரைநோக்கிப் படையெடுக்கின்றனர் என அறிகின்றேன். மணவாளன் ஒருவன் அகப்பட்டுவிட்டாற்கலியாண காலத்துக்கான உடையை இவர் அரசாங்கத்திடமிருந்து அன்பளிப்பாய்ப் பெறுகின்றனர். இது கிடைத்ததுடன் இப்பெண்கள் தங்கள் புருஷர்மாரைக் கைவிடுவார்களாகில், பின்னர் கஷ்ட நிவாரண நிதியையும் பெற்றுக் குசாலாகக் காலம் கழிக்கலாமல்லவா?

❀

### விலகிக் கொண்டார்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்ற பெண்மீது மையல்கொண்டு அவளது மாயவலைக்குள்ளே சிக்கிய ஒருவர் இப்போது அவளை விட்டுப் பிரிந்து விட்டார். இவர் யாழ்ப்பாணம் நகரசபை அங்கத்தவர்களில் ஒருவர் எனவே, குறித்த சபையில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பலம குறைந்துவிட்டது. யாரோ ஒருவரின் இனத்தவர் வேலைமாறி யாழ்ப்பாணத்து மின்சாரப் பகுதிக்கு வரவிரும்பினாராம். குறித்த நகரசபை அங்கத்தினருககு இது பிடிக்கவில்லை ஆனல் வேறு இருவருக்கு இம மாற்றம் பிடித்தபடியால் அவர்கள் மேயரைப்பிடித்து தாங்கள் நினைத்தபடி அவரை நடக்கச் செய்தனராம். ஆகவே வரியிறுப்போரின் நன்மையை விரும்பிய வண்ணார்பண்ணைப் பகுதி பிரதிநிதி, தமது காங்கிரஸ் பதவியைப் பரித்தியாகம் செய்து கொண்டார்? யாழ்ப்பாணம் நகரசபையில் இனிப் பெரிய இழுபறிகளை எதிர்பார்க்கலாம்.

❀

### மானம் எங்கே?

தமிழரின் மானத்தைக் காப்பாற்றுவதற்காகப் பத்திரிகைகளிற் குதித்துக்கொண்டு, தம சாகியத்தைத் தட்டி எழுப்புவர்களுமிருக்கின்றனர். அதே பேடி வீரர்கள் சந்தர்ப்பம வாய்த்தவுடன் தமிழனின் மானத்தை வாங்கவும தயாராக இருக்கின்றனர். ஆரியன் ஹிட்லர் தமிழ் வளர்ப்பதற்காகப் பத்திரிகை ஒன்றைத் தொடங்கினல் மானமுள்ள தமிழரில் எத்தனைபேர் அவர் சொன்னபடி கேட்கவிரும்புவார்கள்? அப்படித்தான் விரும்பிச் சென்றாலும் அங்கிருந்துகொண்டுதமிழ்க் கலைவளர்ச்சிக்காக அப்பேடிவீரர்கள் வீருப்புத் தார்க்குச்சியை எடுத்துப் பிடித்துத்தங்கள் முகங்களிலே கரிபூசிக்கொண்டால்அதற்கு ஹிட்லர் மீது குறைகூறுவதா?

❀

### சீனத்து எழுத்தாளர்

சீனத்துக் கவிஞர் டொக்டர் டட்-சி-டாவ் சமீபத்திற் கான்ரனிற் காலமானர். காந்தியையும், கவிதாகூரையும சீனமக்களுக்கு அறிமுகப்படுத்திய சீனத்து முதல் எழுத்தாளர் இவரே யாவர். 1940-ல் அவர் இந்தியாவுக்கு விஜயம செய்தபோது சாந்திநிகேதனில்வரகவிதாகூருடன் சிலகாலந் தங்கியிருந்தார். இத் தத்துவஞானி சீனத்துப் பிரதிநிதிகள் சபையின் தலைவராகவும் விளங்கியுள்ளார்.

❀

### இப்படியும் ஒன்று

இலங்கையரசினரின் புகைரதங்களைப்பற்றி நாங்கள் கிளப்பும் புகாருக்குக் குறைவில்லை. ஆனல் அஸாமில் உள்ள புகையிரதப் பகுதியைப் பற்றி இந்தியப் பிரதிநிதிகள் சபையில் ஒருவர் அழகாகக் கூறியதைக் கேளுங்கள்:

"அஸாமில் டி. பி. 'ரயில்வே' என்று ஒன்று இருக்கின்றது. எவர் உயிரைத் திரணமாக மதித்துப் பிரயாணம் செய்ய விரும்புகின்றாரோ அவர் தாராளமாக அதிற் செல்லலாம். அந்த ரயில்வண்டி தாண்டிச் செல்லும இடங்களில் எல்லாம் விபத்துகளே. இது மாட்டுவண்டி வேகத்தில் ஓடும். மூன்று மைல் ஓடிய பின் நின்றுவிடும். உடனே பிரயாணிகள் இறங்கி அதைத் தள்ள வேண்டும். இதை என்னென்று சொல்வது?"

* * *

இந்த அழகில் யாழ்ப்பாணத்துப் பகுதிகளில் ஓடும் சில 'பஸ்' வண்டிகள் கூடப் பரவாயில்லையே!

## ஸ்ரீ ஆர். இராஜரத்தினம்

ஐக்கிய சங்கப் பகுதித் துணைப் பதிவுகாரராக மட்டக்களப்பிற் கடமையாற்றும் ஸ்ரீ ஆர். இராஜரத்தினம் அவர்களை ஐரோப்பாவுக்கு அனுப்புவதற்கென அரசாங்கம் தெரிந்தெடுத்துள்ளது. இவர் அங்கு மூன்றுமாத காலம் தங்கிப் பல இடங்களையும் தரிசிப்பார்.

### ஆங்கில எஸ். எஸ். ஸி

சென்ற டிசம்பர் மாதம் நடைபெற்ற ஆங்கில எஸ். எஸ். ஸி. பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று வெளியாயின.

## ஸ்ரீ ராமகிருஷ்ண ஜெயந்தி

### அக்கரைப்பற்று

மட்டக்களப்பு, அக்கரைப்பற்று ஸ்ரீ ராமகிருஷ்ண சங்க வித்யாலயத்தில் ஸ்ரீ கணேசாநந்த சபையாரினதும் வித்யாலய ஆசிரியர்களினதும் ஆதரவில் 1-3-49 செவ்வாய் பிற்பகல் ஜெயந்தி விழா கொண்டாடப்படும். சுவாமி நடராஜாநந்தஜீ தலைமை வகிப்பார். திரு. என். சிவகுருநாதன், திருமதி. அ. சண்மணி அம்மையார், திரு. கா. அருணசல தேசிகர் ஆதியோர் சொற்பொழி வாற்றுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைக்காரன் பிதற்றல்

## சர்தார் சென்னைவிஜயம்

இந்தியா சுதந்திரத்தைப் பெற்றுளதாயினும் இன்னுஞ் சில வெள்ளையர்கள் தமது பழைய உபாயங்கள், தந்திரங்களை இடைக்கிடை கையாண்டு பார்க்கின்றனர். பழையபடி இந்தியா தமது அதிகாரத்துள் வருமா என்பது இவர்கள் காணுங் கனவு. சமீபத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும், வந்து சென்ற கப்ரின் கம்மன்ஸ் என்பவர் அறியாமையால் இந்தியா மீது அளவுகடந்த பழிகளைச் சுமத்துகின்றார். பாகிஸ்தான்மீது பரிந்துபேசுகின்றார். இந்தியாவின் சுதந்திரம் நிலையாதாம், காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கம் விரைந்து அற்றுப்போமாம். சர்வாதிகாரத்தோடு கூடிய இந்து இராச்சியம் இந்தியாவில் ஏற்படப்போகின்றதாம். அப்போது பாகிஸ்தான், இலங்கை முதலிய நாடுகளை இந்தியா விழுங்க எத்தனிக்குமாம். இவ்வாறு அவர் கூறுகின்றார். இங்கிலையில் பிரிட்டிஷார் வந்து இந்தியாவைப் பழையபடி அடிமை கொள்வர் என்பது இவர் மனவாஞ்சை. பண்டிதர் நேருவுக்கு இருந்த மதிப்புப் போய்விட்ட தெனவும் மவுன்பாட்டன் பிரபுவைப் பாகிஸ்தான் அரசினர் குறை கூறுகின்றாரென்றும் இவர் இரைகின்றார். இந்த பழுதுபட்ட அரசியல் வாதிக்குப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் எப்படி இடம் கிடைத்ததோ? என்றும் நடக்கப்போகாத விஷயங்களை பிதற்றுகின்றார். இவர் சொல்வனவற்றிற்கும் ஆதாரங் கிடையாது. இந்தியா முன்னேறிச் செல்லும் முறையைக் கண்டு உலகில் எவரும் அதிசயமும் மனரம்மியமும் அடைய, இவர் மாத்திரம் சலிப்படைவது எதற்கோ? இனிப் பழையபடி பிரிட்டிஷார் இந்தியாவை அடிபணியச் செய்வது ஒருபோதுமே நடவாத விஷயம்.

### சர்தார் படேல்

இந்தியாவின் உதவிப் பிரதமராகும் சர்தார் படேல் இப்போது சென்னைக்கு விஜயஞ் செய்துள்ளார். அங்கு அவர்க்கு ஏற்பட்ட பிரமாதமான வரவேற்பினைக் கூறியடக்குமா? இந்தியா பிரிக்கப்பட்டதின் பேருக எழுந்த தடுமாற்றங்களையும் கலகங்களையும் ஒருபடி சமாளித்து அமைதியை நிலைநாட்டின பெருமை இவர்க்கேயுண்டு. பத்து வருடங்கட்குப்பின் இப்போது தான் சென்னை வந்தனர். இவர் அங்கு ஆற்றிய அரிய பிரசங்கம் ஆராயற்பாலது. மகாத்மாவின் ஒப்பற்ற சத்தியாக்கிரக முறையை அனுட்டித்து இந்தியா சுதந்திரத்தை அடைந்தது. பிரிட்டிஷார் நாட்டிலிருந்து விலகியதன் பேருக இந்தியா பூரண சுதந்திரமடையவில்லையென்று விளக்கினர். உண்மைச் சுதந்திரம் நான்கு பெரிய தூண்களால் தாங்கப்படுவது. அவை முறையே இந்து முஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு, உணவுக்கும் உடைக்கும் பிறரில் தங்கியிராமை, தேசிய பாஷை விருத்தி என்பனவாம். இவைகள் இன்னும் விரும்பியபடி உறுதிப்படவில்லை. மக்கள் இவற்றை விரைந்து கைகூடச் செய்யவேண்டுமென்றார். சுதந்திரத்தை நாம் பெற்றோமேயன்றி எங்கள் மனம் உரியமுறையில் மாறவில்லையென்பதையும் விளக்கிக் காட்டினர். சென்னையில் இரு நாட்களுக்குத் தங்கிப் பின்னர் மைசூர் ஹைதராபாத் என்னும் சமஸ்தானங்களைத் தரிசித்துக்கொண்டு டில்லி சேருவார்.

### கொம்யூனிஸ்டுகள்

இந்தியாவிற் கொம்யூனிஸ்டுகளின் கொடுமை வரவர மிக்க அதிகப்பட்டுளது. எங்கு பார்த்தாலும் கலகங்கள் நிகழ்வதைக் காணலாம். இதற்கெல்லாம் காரணம் கொம்யூனிஸ்ட் என்னும் அபேதவாதிகளே. இலகுவில் தலைவர்களாவதற்கு இவர்கள் கண்டவழி கலகங்களைக் கிளப்புவதே. ஒன்றுமறியாத ஏழைப் பொதுமக்களைத் தட்டியெழுப்பி பலாத்கார முறைகளைக் கையாளும்படி இப்போவித் தலைவர்கள் தூண்டி விடுகின்றனர். நாட்டின் நன்மையைநாடி எத்தனையோ கஷ்டப்பட்டு அரசியலைக் காங்கிரஸ் கட்சியினர் நடத்துகின்றனர். பொது மக்களின் நன்மையே என்றும் இலக்காகக் கொண்டுள்ளார். அப்படியிருக்க அரசாங்கத்துக்கு மாருகக் கிளம்பின் இச்சமயத்தில் பெரு நட்டம் ஏற்படாதா? சுதந்திரம் பெற்ற இந்தியா எத்தனையோ அரிய விஷயங்களைப் புதிதாகச் செய்து முடிக்கவேண்டியதாகின்றது. கைத்தொழில்களைப் புதிதாக அமைத்து நிலைப்படுத்த வேண்டியதாகின்றது. கல்வி முறையை மாற்றியமைக்கவேண்டியதாகின்றது. உணவுப்பொருள் விருத்தியைத் துரிதப்படுத்த வேண்டியதாகின்றது. இப்படியான இந்த அரிய சமயத்தில் நாட்டில் இந்த அபேதவாதிகள் கலகங்களைக் கிளப்ப யாவர் இடங்கொடுப்பார். இந்திய அரசினர் கட்டளைப்படி இப்போது எல்லாமாகாண அரசினரும் இந்த அபேதவாதிகளை அடக்கச் சட்டங்கள் இயற்றி விட்டனர். இப்போது இக்கட்சித் தலைவர்கள் நூற்றுக்கணக்காகச் சிறையில் அடைக்கப்படுகின்றனர். அடாதமுறைகளை ஒவ்வாத காலத்திற் கையாளும் இந்தத்தேசவிரோதிகளை அரசினர் அடக்குவது சாலவும் பொருத்தமே.

### மறுபடியும் கலகமாம்

தென்னாபிரிக்காவில் சமீபத்தில் இந்தியர்க்கு எதிராக எழுந்தகலகம் யாவரும் அறிந்த விஷயம். இக்கலகத்துக்குக்காரணர் தென்னாபிரிக்காவினைப் பரிபாலிக்கும் வெள்ளையரென்பதை பல அத்தாட்சிகளால் விளக்கினர். இப்போதுமறுபடியும் இந்தியரை அங்குள்ள காப்பிரிகள் தாக்குவதாகப் புதினங்கள் கூறுகின்றன. இக்கலகத்தின் காரணத்தை விசாரணை செய்ய ஒரு சபை ஏற்படுத்தப்பட்டது. அச்சபையில் இந்தியன் ஒருவனுவது இடம் பெறவில்லை.

இந்தியஅரசினர் இவ்விஷயமாக இன்னும் பொறுத்திருப்பதா? புறநாடுகளில்இந்தியர் இவ்வளவுகஷ்டப்பட இதை எவ்வளவு காலத்துக்குப்பார்த்து நிற்பது. சுதந்திரமடைந்த இந்தியா தமது மரியாதையைக்காப்பாற்றுவது மிகவும் அவசியமன்றோ. தென்னாபிரிக்காவில் இந்தியர் போதிய உரிமையுடன் வாழ இடம் பெறவேண்டும். அன்றேல் தமது நாட்டுக்குத் திரும்ப வேண்டும்.

### அமெரிக்கா அழைப்பு

இந்தியப்பிரதமர் நேருஜி இவ்வருட நடுப்பகுதியில் அமெரிக்கா செல்வாரென நிச்சயமாகக் கூறப்படுகின்றது. பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையிலுள்ள பிணக்கு நீங்கிச் சமாதானம் ஏற்படின் இந்தியாவில் ஓரளவுக்கு அமைதி என்றே கூறவேண்டும். அமெரிக்கஜனதிபதிட்ரூமன் பண்டிதரை அழைத்து உலகசமாதானத்தை நாட்டவும், கொம்யூனிஸ்ட் கொடுமைகளைத் தடுக்கவும் பெரிய ஒழுங்குகள் செய்ய எண்ணியுள்ளாரென்றும் பத்திரிகைகள் கூறுகின்றன. ஆசிய மகா நாட்டின்பின்னர் இந்தியாவின் பெருமை பன்மடங்கு உச்சநிலையை அடைந்துளது. இந்தியாவே உலகுக்குவழிகாட்டியாகவேண்டுமாம. இந்தியரின் வழிதான் உலகில் நிலையான சமாதானத்தை கொண்டுவருமென்று பொதுவாக எல்லாநாடுகளும் கருதுகின்றன. அமெரிக்க பிரஜாதிபதியும் இப்படியாக எண்ணுவது நூதனமல்ல.



## நமது வாசிகசாலை

**பொதுநலப் புரவலர்:** ஆசிரியர்: வித்துவான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை, பிரசுரம்: உமாதேவன் கம்பெனி, 16, செம்புதாஸ் தெரு, சென்னை, விலை: அணு 12.

பேனுட் ஷோ அவர்கள் இன்று மகாமேதையெனவும் உலகப் பேரறிஞர் எனவும் கருதப்படுகின்றார். ரோல்ஸ்ரோய் ருஷிய ஞானியாராக விளங்கி உலகின் கவனத்தையும் கவர்ந்துள்ளார் பிரான்ஸ் நாட்டுப் பெருநாவலராகிய ரோமேயின் ரோலங் இன்று உலக உத்தமனுக விளங்குகின்றார், பொதுநலப் பிரியரான காள்மாக்ஸ் விஞ்ஞானப் பொதுவுடைமையின் தந்தையென மதிக்கப்படுகின்றார்.

பொதுநலப் புரவலர் என்ற இந்நூற்கண் உலகப்பெருமக்கள் வரிசையில் வைத்துக் கணிக்கப்படும் மேற்கூறிய பெரியார்களின் வாழ்க்கையை வித்துவான் வேணுகோபாலப்பிள்ளை நல்ல தமிழில் மாணவர்களுக்கு உகந்த முறையில் எழுதியுள்ளார். இப்பெரியார்களைப்பற்றி அவ்வப்போது ஆங்கிலத்தில் வெளிவந்த நூல்களையும் கட்டுரைகளையும் ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்:

இ. அ.

**நமது வாசிகசாலையில் விமர்சனத்திற்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும். மதிப்புரை விரும்புவோர் இதனைக் கவனிப்பாராக.**

**பொன்னி:** பொங்கல் மலர் 1949. ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன் விலாசம் த. பெ. எண் 39, புதுக்கோட்டை. விலை ரூபா 3-12-0.

பொங்கல் நன்னுளிலே மலர்ந்த பொன்னி மலர் ஒரு இலக்கியப் பூங்காவாகவே அமைந்திருக்கின்றது. கண்ணைப் பறிக்கும் வண்ணச் சித்திரங்களும் கருத்துக்கினிய இலக்கியக் கட்டுரைகளும் மலரைப் பரிமளிக்கச் செய்கின்றன. ஓவியர்களின் முயற்சிகள் பாராட்டத்தக்கன. பெரியார் ஈ. வே. இராமசாமி, அறிஞர் அண்ணுத்துரை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், நாரா நாச்சியப்பன், மு. வரதராசனர், முருகு சுப்பிரமணியன், வித்துவான் திருநாவுக்கரசு ஆதியோர் உட்படப் பல எழுத்தாளர்கள் சிந்தனைத் தெளிவுடன் நல்ல விஷயங்கள் எழுதியிருக்கின்றனர்.

"தமிழை அலங்கரிக்குஞ் சிற்பிகள்" ஒரு நல்ல முயற்சி. விபுலாநந்த அடிகளாரை அறிமுகப் படுத்தும்போது அன்னர் "தென்னிலங்கை நாட்டிற் பிறந்தவர்" எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இது தவறு. அடிகளார் பாலுக் தேனும் பல்கிப்பெருகும் மட்டக்களப்பிற் பிறந்தார். மட்டக்களப்புக் கிழ்மாகாணத்தின் தலைநகரமாகும்.

சுகியின் 'மாட்டுத்தொழுவம்' உயர்ந்த நகைச்சுவைக்கும் தெளிவான பேச்சுநடைக்கும் ஓர் உதாரணம்.

"எழுத்தாளர் ஏகாம்பரம்" இளமைப்பித்தன் எழுதிய அனுபவ சித்திரமாகும்?

வித்தகன் புதுமைப்பித்தனை யார்தான் மறப்பார்கள்? அவருடைய மனைவியார் கமலா விருத்தாசலம் நோய்வாய்ப்பட்டிருந்த சோ. வி. அவர்களின் 'கடைசி இரவு' நிகழ்ச்சிகளைத் தந்துள்ளார். அவற்றைப் படிக்கும் போது உள்ளமே உடைந்துவிடுகின்றது.

மணக்கமழும் பொன்னி பொங்கல் மலர் கன்னித் தமிழின் பெருமையைக் கூறும் ஓர் உன்னதமான கலைப்பணியாகும்.

●

**சக்தி:** சர்வதாரிபொங்கல்மலர். ஆசிரியர்: வை. கோவிந்தன், கூட்டாசிரியர்: ஜி. அழகிரிசாமி. விலாசம்: 115 E மோபரீஸ்வீதி, இராயப்பேட்டை, சென்னை 14. விலை ரூபா 1-0-0.

இலக்கியப் பண்பாடும் அரசியல் அறிவும் கைவரப்பெற்ற ஆசிரியர்களின் கட்டுரைகளுடனும் அழகிய வர்ணப் படங்களுடனும் கைக்கு அடக்கமான முறையிற் சக்தி பொங்கல் மலர் வெளியாகியுள்ளது. நமது பள்ளிக்கூடங்களிற் கவிதை எவ்வாறு கற்பிக்கப்படவேண்டுமென்பதை எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் ஆராய்ந்துள்ளார்கள் கிரீஸுக்குத் தென்கிழக்கேயுள்ள எமலோஸ் தீவைப்பற்றியும் அது ஏகாதிபத்தியத் தேவதைக்கு இரையாகிய வரலாற்றினையும் அறிஞர் வே. சாமிநாதசர்மா விரிவாக எழுதியுள்ளார். மஞ்சேரி எஸ். ஈச்வரன் அவர்களின நாடகம் காவிய இரசனையுடன் ததும்புகின்றது. தி. ஜ. ர. அவர்களே இதை ஆங்கிலத்திலிருந்தும் மொழிபெயர்த்திருக்கின்றார்போலும். கவிமணி தே. வி., சுத்தாநந்தபாரதியார், பெ. திருகூடசுந்தரம், மு. அருணசலம், ஆ. முத்துசிவன் உட்பட வேறும் பிரபல எழுத்தாளர்களும் எழுதியிருக்கின்றனர்.

## பதில் வித்தியாதிகாரி

### இளைப்பாற யோசனை

கல்விப் பகுதியின் பதில் வித்தியாதிகாரி ஸ்ரீ டபிள்யூ ஏ. டி' சில்வா, தமது கடமையினின்றும் இளைப்பாறப் போவதாக அரசாங்கத்துக்கு அறிவித்துவிட்டார்.

திடீரெனக் கிடைத்த இச்செய்தி கொழும்பில் மிகுந்த பரபரப்பை உண்டாக்கிவிட்டது. இவருக்கும மேல் அதிகாரி ஒருவருக்கும் இடையே அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருப்பதே இதற்குக் காரணமெனத்தெரிகின்றது.

நிரந்தர வித்தியாதிகாரி நியமனத்தில் எழுந்துள்ள சிக்கலும் ஒரு காரணமாகக் கூறப்படுகின்றது. ஸ்ரீ சில்வாவுக்கு இப்போது 44 வயது. கல்விப் பகுதிச் சீரமைப்புக்காகவே இவர் "சிவில் சேவிஸ்' துறையிலிருந்து வித்தியாகந்தோருக்கு மாற்றப்பட்டார். இவருடைய காலத்தில் வித்தியாகந்தோரில் நல்ல திருத்தங்கள் உண்டானவெனவும், பொது மக்களுடன் நடந்துகொள்ளும் வகையில் திருப்திகரமான நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

### கலாமந்திரம்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலுள்ள கலாமந்திரத்தின் கிளை நிலையம் ஒன்று சமீபத்தில் உரும்பராயில் ஆரம்பிக்கப் பெற்று சங்கீத வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

# சிங்கக்கொடி

## இலங்கைக்கு வேண்டியதில்லை

### டொக்டர் நெல் முடிபு

இலங்கைத் தேசியக்கொடி பற்றிய சிக்கல் இன்னுந்தான் தீர்ந்தபாடில்லை. இதற்கிடையில் யூ. என். பி. அரசாங்கம் தாங்கள் விரும்பிய சிங்கக்கொடியைப் பறக்கவிட்டுக் கொண்டு பெருமையடித்து வருகின்றது.

இது சம்பந்தமாக டொக்டர் அன்ட்றியஸ் நெல் தேசியக் கொடியை நிர்ணயிக்க ஏற்பட்டுள்ள சபைக்குச் சமர்ப்பித்துள்ள தமது அறிக்கையிற் சிங்கக்கொடியைப் பறக்க விடுவதிலும்பார்க்க வேறோர் புதிய கொடியை ஏற்படுத்திக் கொள்வதே உகந்ததெனக் குறிப்பிட்டுள்ளார். டொக்டர் அவர்களின் அபிப்பிராயப்படி எந்தக் காலத்திலாவது இலங்கையிலே தேசியக்கொடி என ஒன்று இருந்ததே கிடையாது. சிங்கக்கொடி இன்று யூ. என். பி. யுடனும், சிங்கள மகா சபையுடனும் பெரிதும் தொடர்புற்றிருப்பதால் அதை [illegible] [illegible] கும்.

உலகிலுள்ள பல்வேறு நாடுகளிலும் மன்னர்களும் நாட்டுத்தலைவர்களும் தங்களுக்கெனக் கொடிகளை அமைத்திருந்தனரேயன்றிப் பொதுவான தேசியக் கொடிகளை அமைக்கவில்லை. ஐரோப்பாவிலோ, அன்றேல் ஆசியாவிலோ தேசியக்கொடி யிருந்ததில்லை யென்பதே டொக்டர் கண்ட முடிபாகும்.

எனவே, புதியதோர் தேசியக்கொடியை இலங்கை அமைத்துக்கொள்வதே புத்திசாதுரியமான காரியமென அவர் அழுத்தியுள்ளார்.

ஞாபகார்த்தம்

1944-ம் ஹு மாசி 28-ந் உ இந்தஉலகைவிட்டுப்பிரிந்த மெர்ஸி சுகிர்தரத்தினம் சாமுவேலின் அன்பான ஞாபகார்த்தம்

"இராவில்லாத நித்தியபகலும்,
நோயற்ற வாழ்வுமே,
சாகாத துயர் வாழ்ந்திடும்
பேரின்ப நாட்டிலே—"

"WESTHOLME"
KINROSS AVENUE
BAMBALAPITIYA [3619]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குகையில் வசித்த கறுப்பையா

## கன்னிப் பெண்ணின் உதவி

கறுப்பையா என்ற மனிதன் ஒருவன் மாத்தளையிலுள்ள அலுவிகாரையைச் சேர்ந்த காட்டிலுள்ள குகைக்குள் ஆறுமாத காலம் வாழ்ந்தான். இவன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு சென்ற 14-2-49 ல் விடுதலைபெற்றான். அவனன்று விடுதலையடைந்து திரும்பியபோது தாடி, மீசை, தலைமுடி சகிதமாகத் தோற்ற மளித்தான்.

இவன் 10 மாதகாலத்துக்கு முன் அலுவிகாரைக் குடும்பத்தினரிடம் வேலைக்கு அமர்ந்திருந்தான். அவர்களைவிட்டு விலகிய கறுப்பையா வேறொருவரிடம் வேலை செய்துவந்தான். பின்னர் அவர்களையும் விட்டு விலகியவன் பொலிஸாருக்குப்பயந்து அலுவிகாரைத் தோட்டம் என்று சொல்லப்படும் தாமரைவல்லித் தோட்டத்திலுள்ள மலையுச்சியிற் புகுந்து கொண்டான்.

காட்டிற்குள் மறைந்த கறுப்பையா நாட்டுத் தோடம்பழங்களை அருந்திவந்தான். அவன் பாறையிலுள்ள மண்டபம் போன்ற வெளியிற் படுத்துறங்கிவந்தான். ஒருநாள் இரவு படுத்துறங்கியபோது ஒரு கன்னிபெண் அங்கு தோன்றி அவனைக் கையிற் பிடித்துக் கொண்டுபோய் மாவள்ளிக்கிழங்குத் தோட்டத்தைக் காட்டினான். அவன் தினமும் தேவைக்குவேண்டிய கிழங்குகளைப் பிடுங்கி எடுத்துக்கொள்வான். அத்தோட்டத்தில் ஒரு குடிசையுண்டு. அங்கு அகப்படும் நெருப்பை எடுத்துச் சென்று கறுப்பையன் தீக்காய்வது வழக்கம். அக் குடிசையில் உப்பு மிளகாய் வெற்றிலையும்கிடைப்பதுண்டு.

### குடிசைக் களவு

குடிசையிலே மத்தியான வேளைகளிலேதங்கும் தோட்டக்காரனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அவனுடைய மட்பாண்டமும் காணமற் போகவே அவன் ஆசாமியைப் பிடிப்பதற்காக ஒரு நாள் காத்திருந்தான். சாயங்காலம் குகையை விட்டுக் குடிசைப் பக்கம் சென்றபோது தோட்டக்காரச் சிங்களவன் ஆளைக் கண்டுவிட்டான். ஆனால் மறுகணம் அவன் அவ்விடத்தை விட்டு ஓட்டம்பிடித்துவிட்டான். பின்னர் ஆசாமி யாராக இருக்கலாம் என அறிந்தபடியாற் போலும் குடிசையிற் சில சமயம் அவித்த மரவள்ளிக்கிழங்கும் துவையலும் புறம்பாக எடுத்துவைப்பதுண்டு. கறுப்பையன் அவற்றை எடுத்துச் சாப்பிட்டதேயில்லை. இப்போது இவன் மீண்டும் பழைய எஜமான் வீட்டிலேயே இருக்கின்றானெனத் தெரிகின்றது.

# ஆனைப்பந்தி ஆண்கள் பாடசாலை

## திருத்தி அமைக்க நிதி

ஆனைப்பந்தி ஆண்கள் பாடசாலையைப் புனருத்தாரணஞ் செய்வதற்காகத் திரு. வி. இளையதம்பி அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் மேற்படி பாடசாலையில் ஆரம்பமாயிற்று. சென்ற ஐம்பது வருடங்களாகக் கல்விப்பணியாற்றிவரும் ஒரு புனிதமான ஸ்தாபனத்தைப் பட்டணத்தன் இந் நிலையில் விட்டுவைப்பது தகாதென்றும், பழைய மாணவர்களும் அனுதாபிகளும் வேண்டிய முயற்சி எடுத்து விரைவில், திருத்தியமைக்கவேண்டும் எனத் தலைவர் குறிப்பிட்டார்.

பாடசாலைத் தலைமை ஆசிரியர் எஸ். நாகையா அவர்கள் பேசுகையில் இன்று மனோதத்துவ சாஸ்திர விதிக்கமைவாகவே கல்வி போதிக்கப்படுகின்றது. அவர்கள் மனம் கவர்ச்சிகொள்ளக்கூடியவிதமாகப் படிப்பித்தல் முறைகளும், பாடசாலைச் சூழலும் அமையவேண்டியது அவசியமாகும். பாடசாலைக் கட்டிடத்தைத் திருத்தி அமைப்பதன் மூலம் மாணவரின் சூழலை அபிவிருத்தி செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது உங்கள் கடமையாகும் எனக் குறிப்பிட்டார்.

நாடகம், கதம்பக்கச்சேரிகள், அன்பளிப்புகள் என்பனமூலம் பணம் சேகரிக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டதோடு, அவற்றிற்கான மூன்று உப சபைகளும் அமைக்கப்பெற்றன.

திரு. வி. இளையதம்பி தலைவராகவும், திரு. வி. சிவசுப்பிரமணியம் பொதுக் காரியதரிசியாகவும், திரு. எம். சிவநேசராசா தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். திரு. எ. ரீ. மூர்த்தி அவர்கள் தந்திமூலம் பணம் அனுப்பி நிதியை ஆரம்பித்து வைத்தார்.

தனாதிகாரி, **ஆனைப்பந்தி ஆண்கள் பாடசாலை கட்டட நிதி**, ஆனைப்பந்தி ஆண்கள் பாடசாலை, மட்டக்களப்பு என்ற விலாசத்திற்கு அன்பர்கள் பணம் அனுப்பி உதவலாம்.

# திமிங்கிலம் தென்பட்டது

## படகிற்சென்றோர் அதிர்ச்சி

சென்ற செவ்வாய்க்கிழமையன்று கொழும்புத் துறைமுகத்தில் 50 அடி நீளமுள்ள திமிங்கிலமும் 15 அடி நீளமுள்ள அதன் குட்டியும் தென்பட்டன. பத்துப் பேர் பிரயாணம் செய்த 30 அடி நீளமுள்ள ஒரு மோட்டோர் படகின் கீழ்த்தளத்தில் குட்டித் திமிங்கிலத்தின் முதுகு சிறிதளவுக்கு மருவியது. படகிற் சென்றோர் இதைப் பார்த்துத் திகைத்துப் போயினர்.

போதாக் குறைக்கு சிறிது நேரத்துக்குப்பின்னர் அக்குட்டியின் தாயும் படகிலிருந்து 3 அடி தூரத்துக்கு அப்பால் நீரைக் கிழித்துக்கொண்டு தோன்றியது. அதன் வாயிலிருந்து அருவி பாய்வது போன்று 12 அடி உயரத்துக்குமேலே நீர்கிளப்பிச் சொரிந்தவண்ணமாக இருந்தது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### இல. 3226

உடுவில்
**அப்புக்குட்டி தம்பையா**
வழக்காளி

உடுவில்
**வேதக்குட்டி செல்லத்தம்பி**
**மிச்சாட் கைம்பெண் மேரி முத்தம்மா**
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 3226-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகள் 1949-ம் ஆண்டு மார்ச்சு (பங்குனி) மாதம் 23-ந் திகதி (23-3-49) புதன்கிழமை பிற்பகல் 4½ மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 1391-25-ம், இதில் ரூபாய் 750-00-க்கு 9-12-46 திகதி தொடக்கம் 21-1-47 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 147-30 சதம்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவிற் கோவிற்பற்று உடுவிலிறை "வீரவத்தனை" நிலப்பரப்பு ஐந்து (5-ம்) செய்பயிர்களும், கீழே குறிக்கப்படும் காணிக்குள் இருக்கும் கிணற்றிற் பங்கும். எல்லை: கிழக்கும், வடக்கும், அருணாசலம் பெண் ஞானமலருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் மேற்கு, கீழே குறிக்கப்படும் ஆதனம். தெற்கு, ஒழுங்கை. இவ்வெல்லைக்குட்பட்டவைகளிற் சொரியலாய் அரைவாசி (½)

2. மேற்படி உடுவிலிறை "வீரவன்தனையும், வீரவத்தனையும்" நிலப்பரப்பு மூன்றேகால் (3¼-ம்) செய்பயிர் வான்பயிர்களும் வீடுகளும் கிணற்றுப்பங்கும் எல்லை: கிழக்கு, மேலே குறிக்கப்பட்டிருக்கும் ஆதனமும். அருணாசலம் பெண் ஞானமலருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு, கனகசபை மகள் தெனிற்றாவள்ளியம்மையின் ஆதனம். மேற்கு, யேம்ஸ் சின்னப்பு சின்னத்துரைக்கும் பெண் இம்மிலி இராசம்மாவுக்குமுரிய ஆதனம். தெற்கு, ஒழுங்கை. இதடங்கலும்.

**சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை**
Commissioner &
Licensed Auctioneer

தெல்லிப்பழை
16.2.49 [3617]

# இலங்கையின் பிரதம தேசாதிபதி

## பிரபுசோல்பரி நியமனம்

இலங்கையின் பிரதம தேசாதிபதியான சேர் ஹென்றி மூர் இவ்வாண்டு ஜூன் மாதத்தின் தமது பதவியினின்றும் நீங்கிக் கொள்கின்றார்.

இவருக்குப் பிறகு . இப்பதவிக்கு சோல்பெரிப் பிரவு நியமிக்கப்பட்டுள்ளார் சென்ற செவ்வாய்க்கிழமை வெளியாகிய அறிக்கை இந்நியமனத்தை உறுதி செய்கின்றது.

இலங்கையின் அரசியற் பரிசிலனைத் தலைவராக இவர் 1944ம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்தார். பின்னர் 1948ம் ஆண்டில் நடைபெற்ற சுதந்திரவிழாவிற் கலந்து கொண்டார். அப்போது இலங்கைப் பல்கலைக்கழகம் அவருக்கு டொக்டர் பட்டத்தை வழங்கியது.

சோல்பெரிப்பிரபு அவர்களுக்கு இப்போது 62 வயதாகும். பிறந்த திகதி 6–3–87. இவர் இவ்வாண்டு ஒகஸ்ட், அல்லது செப்டம்பரில் இலங்கை வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## திராவிடர் கலை மன்றம்

பருத்தித்துறை வாரத்துப்பளையிற் சமீபத்திலே 'திராவிடர் கலைமன்றம்' என்னும் பெயருடன் ஒரு நூல் நிலையம்தொடக்கப்பட்டது. நூல்நிலையத்தைத் தோழர் சி. தர்மகுலசிங்கம் அவர்கள் திறந்து வைத்துக் கூட்டத்துக்குத்தலைமை தாங்கினார். தலைவர் நூல் நிலையத்தின் அவசியத்தைப் பற்றிப் பேசியபின் ஆசிரியத் தோழர்கள் ஜே. பி. செல்வத்துரை, ஆறுமுகம் முதலியோர் திராவிடத்தின் பண்புகளையும் பழந்தமிழர் வாழ்க்கையையும் பற்றி வெகு உணர்ச்சியுடன் பேசினார்கள்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### இல. 4250

வண்மேற்கு
**வயிரவி வயிரமுத்து**
வழக்காளி

புன்மேற்கு
**கார்த்திகேசு நாகலிங்கமும்**
**பெண் சிவக்கொழுந்துவும்**
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 4250 – ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1949 ஆம் பங்குனி மீ 19-ம் உ சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை:**— முதல் வட்டி ரூபா 2236-75ம் இதற்குத தீர்வைத்திகதி தொடக்கம் 100-க்கு 5 வீத வட்டியும் ஷெ 24-2-48 முதல் 13-6-48 வரை ரூ. 2000-க்கு 8 வீத வட்டியும்

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடுதீவு கோயிற்பற்று புங்குடுதீவு மேற்கு, இறை குறம்பத்தனை நிலப்பரப்பு 9-ம் குழி 1⅛-ம் வீடுகளும் பனைகளும் எல்லை; கிழக்கு, பொன்னம்பலம் பெண் ஒகஸ்றாக்கும் மறுபேருக்கும் வடக்கு இராமன் மகன் சின்னக்குட்டிக்குரிய ஆதனம் மேற்கு, ஒழுங்கை. தெற்கு அருணாசலம் பெண் பொன்னம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் இதடங்கலும்

S. Ambalavanar
கொம்மிஷனர்

புங்குடுதீவு
1949ஆ மாசி மீ 14உ
[3616-ii]

# வதுளை சைவபரிபாலன சபை

## வருடாந்த கூட்டம்

மேற்படி வருடாந்தக் கூட்டம் 12-2-49 சனிக்கிழமை ஸ்ரீ ஆர். இராமசுப்பிரமணியன் தலைமையில் சரஸ்வதி வித்தியாசாலையில் நிகழ்ந்தது. இலங்கைக் கல்வி மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி ஸ்ரீ கே. கனகரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்பு ஆறரைமணியளவில் சங்கத்தின் வருடாந்த மகாசபைக் கூட்டம் ஆரம்பமாயது. ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுள் இரண்டுவருமாறு

வதுளையிலே தமிழ் மாணவர் கல்வி கற்பதற்குத் தகுந்த வித்தியாசாலைகளின்றிக் கஷ்டப்படுவதால், சைவபரிபாலன சங்கம் சரஸ்வதி வித்தியாசாலையைப் பெருப்பித்து ஒரு கனிஷ்ட ஆங்கில பாடசாலையாக்கிக் கூடிய விரைவில் ஒரு கலாசாலையை அமைத்தற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்; அதற்காகக் கலாசாலைக் கட்டிட நிதி உபசபை ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

இலங்கையிலுள்ள பல சங்கங்கள் வேண்டிக்கொண்ட போதும், இலங்கையின் பல பொது ஸ்தாபனங்களில் (ஆலயங்கள், பள்ளிக்கூடங்கள் முதலியன) தாழ்த்தப்பட்டவர்களை அனுமதிப்பதற்கு அரசாங்கமோ அன்றிப் பிரதிநிதிகள் சபை அங்கத்தவர்களோ எவ்வித நடபடிக்கையும் எடுக்காதிருப்பதற்குச் சங்கம் வருத்தத்தைத தெரிவிப்பதுடன், இந்தியாவைப் பின்பற்றி அதற்கு வேண்டிய சட்டங்களை வகுத்தற்கு வேண்டியன செய்யும்படி இச்சபை பாராளுமன்ற அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கின்றது.

— கடிதம்

# வட-இலங்கை கிராமச்சங்க சேவகர் யூனியன்

மேற்படி யூனியனின் முதலாம் பொதுக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (13-2-49) வட்டுக் கோட்டை கிராமச்சங்க காரியாலயத்தில் நடைபெற்றது. போஷகர் ஸ்ரீ அ. தே. வேதாபரணம் தலைமை வகித்தார். மாதம் 7 ரூபாய் சம்பளம் பெறும் சேவகர்கள் கூடக் கிராமச் சங்கத்திலே தொழில் ஆற்றுகிறார்களென்றும், அவர்களுக்குச் சீவனத்திற்குத் தகுந்த பணம் கொடுபடவேண்டுமென்றும், அத்துடன் அரசாங்க உத்தியோகத்தர் அனுபவிக்கும் சௌகரியங்களில் சிலவற்றை இவர்களும் அனுபவிக்க வேண்டுமெனவும் தலைவர் தமது பேச்சிற் குறிப்பிட்டார்.

### அதிகாரியைச் சந்தித்தல்

சென்ற செவ்வாய்க்கிழமை (15–2–49) மேற்படி கோஷ்டியினர் ஸ்தல ஸ்தாபன அதிகாரி ஸ்ரீ வி. ஸி. ஜயசூரியாவை யாழ்ப்பாண வாடிவீட்டிற் சந்தித்தனர். தலைவர் ஸ்ரீ அ. தே. வேதாபரணம் சேவகர்களுக்கு ஓர் திருப்திகரமான சம்பளமும் ஏனைய சலாக்கியங்களும் கொடுப்பதற்கு ஆதாரமாயுள்ள ஓர் வருமானப் பெருக்க அறிக்கையை அதிகாரிக்குச் சமர்ப்பித்தார். அதிகாரி ஆவன செய்வதாகத் தெரிவித்தார். ஸ்ரீமான்கள் க. கைலாசபிள்ளை, நா. சின்னையா என்பவர்கள் ஆலோசனையாளர்களாகவும், ஸ்ரீமான்கள் க. சிவசுப்பிரமணியம், க. சிவசம்பு என்பவர்கள் யூனியன் உத்தியோகஸ்தர்களாகவும் கோஷ்டியிற் கலந்து கொண்டனர்.


# பணம் கிடைக்கவில்லை 'கார்' அகப்பட்டது

குதிரைப்பந்தயச் சங்கத்துக்குரிய பணத்தைக் கொள்ளையடித்த ஆசாமிகள் உபயோகித்ததாக நம்பப்படும் ஒரு'கார்' அகப்பட்டுள்ளது. இக்'கார்' ஸ்ரான்டேட் சாலூனாகும். கறுப்புநிறம். கொட்டாஞ் சேனையிலுள்ள பொஞ்சியன் வீதியிற் கண்டுபிடிக்கப்பட்டுப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. கார் இலக்கம் CE 757. இதன் சொந்தக்காரர் எம். சே. உவில்ஸன் என்பவர். கொட்டாஞ் சேனையில் வசிப்பவர். இவர் இப்போது விளக்கமறியலில் இருக்கின்றார்.

கொள்ளைக்காரரையும் பணத்தையுங் கொண்டு செல்வதற்காகப் பொரளை, குணசேகரா லேனில் ஓர் கார் ஆயத்தமாக இருந்திருக்கலாமெனப் பொலிஸார் கருதுகின்றனர். கொள்ளையடிக்கப்பட்ட பணம்பற்றி ஒரு அடையாளமுங் கிடைக்கவில்லை. இதில் ஒரு பெரிய கூட்டம் ஈடுபட்டிருக்கின்றதெனப் பொலிஸார் நம்புகின்றனர்.

சந்தேகத்தின்பேரிற் கைது செய்யப்பட்ட கு. ப. சங்கத் [illegible] 5000 பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மருமக்களே!

வணக்கம். இராத்திரியெல்லாம் சிவராத்திரிக்காக நித்திரையில்லாது விழித்துக்கொண்டிருந்திருப்பீர்களென்றே நினைக்கிறேன். என்றாலும் எதற்காக நித்திரைவிழித்தீர்கள் என்றுசொல்ல விரும்புகிறேன். வாசித்துப் பாருங்கள்.

மாசிமாதம் கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசி இரவு பதினன்கு நாழிகை, இலிங்கோற்பவ காலம், இதுவேமகாசிவராத்திரி புண்யகாலம். கிருஷ்ணபக்ஷம் திரயோதசி (௩0) நாழிகைக்குச் சதுர்த்தசி வியாபிப்பது உத்தமம். திரயோதசியில்லாமல் சதுர்த்தசி வியாபிப்பது அதமம்.

ஒருகாலம் அன்றைய இராத்திரிக்கு அமாவாசை பிரவேசிப்பது பரியாய சிவராத்திரி. இந்த மகாசிவராத்திரி தினத்தில் நேரிடும் திரயோதசி பரம சிவத்திற்குத் தேகமாகவும், சதுர்த்தசி தேகியாகவும் அன்றிச் சத்தியாகவும் சிவமாகவும் கூறப்பட்டிருக்கிறது.

சிவராத்திரிமுத்ற்சாமமுதல் நான்கு சாமங்களிலும் ஆத்மார்த்த பரார்த்த பூசைகள் நடத்தவேண்டியது; தானஞ் செய்யவேண்டியது. இதன் பலன் இம்மையில் சற்சன தானுதி சௌபாக்கியசம்பத்தும் மறுமையில் சுவர்க்காதி போகமுமாம்.

பிரம விஷ்ணுக்கள் பொருட்டுச்சிவமூர்த்தி இலிங்கோற்பவமாய் எழுந்தருளியபோது தேவர்கள் பூசித்தகாலம் எனவும் ஒரு பிரமகற்பத்தில் சக்தி நாற்சாமத்திலும் சிவ பூசை செய்து தாம் பூசித்தகாலம் சிவராத்திரியாக எனச் சிவ மூர்த்தியை வரம் வேண்டிப்பெற்ற நாள் எனவும், பாற்கடலிற் தோன்றிய விஷமுண்ட சிவமூர்த்தியை விஷம் பீடிக்காமல் தேவர் இரவுமுழுதும் பூசித்த காலம் எனவும், ஒ நாற்பத்தில் அண்டங்கள் எல்லாம் இருள உருத்ரர் அந்த இருள் நீங்கச் சிவத்தைப் பூசித்தகாலம் எனவும் பல புராணங்கள் கூறுகின்றன.

நிற்க, சுகாதாரப் பரிசோதகர் எஸ். சண்முகம்பிள்ளை அவர்கள் இயற்றிய பாடசாலை மாணவர்க்கேற்ற சுகாதார விதிகளை* நீங்களும் அறிவதற்காகத் தருகின்றேன். அதையும் வாசித்துப் பாருங்கள். வணக்கம்.



*வைத்திய சுகாதாரப் பகுதியால் வெளியிடப்படும் சுகாதாரப்பத்பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.

### மாணவர்கட்கேற்ற சுகாதார விதிகள்

#### வேண்டும் பத்து

நித்தம் பல் முகம் சுத்திசெய்யவேண்டும்,
மறவாது நிதமும் மல மகற்றவேண்டும்,
தினமும் உடலைச் சுத்திசெய்யவேண்டும்,
சுத்த பவன முட்கொள்ளவேண்டும்,
பசித்த நேரமே புசித்தல்வேண்டும்,
நன்றாய் உணவை மென்று தின்னவேண்டும்,
காய் கிரை கிழங்குகளுடன்
உணவைக்கொள்ளவேண்டும்,
வியர்வை ஓட வேலை செய்யவேண்டும்,
புனிதமான உடையை அணியவேண்டும்,
சுத்தமே சிறந்ததென உணரவேண்டும்.

#### வேண்டாப் பத்து

யன்னல் திறவாது நித்திரை செய்யவேண்டாம்,
கக்கூசு உபயோகிப்பை மறக்கவேண்டாம்,
வேகாத உணவுகளை உண்ணவேண்டாம்,
காய்ச்சாமல் நீரினை நீ பருகவேண்டாம்,
ஈமொய் பண்டம் எதையும் விரும்பவேண்டாம்,
அழுகிய இழிய உணவை அருந்தவேண்டாம்,
நோயுற்றார் வாசல் வழி போகவேண்டாம்,
கண்ட இடமெல்லாம்நீ துப்பவேண்டாம்,
சுகாதார விதிகளை மறக்கவேண்டாம்,
மறந்து நோய்வாய்ப்பட் டழுந்தவேண்டாம்.

**ஈழகேசரி — பாலர் பகுதி**

முழுப்பெயர்:.........................................

விலாசம்:.........................................

.........................................

.........................................

பிறந்ததிகதி:.........................................

.........................................

தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

# நாமக்கல் கவிஞர்

**க. தேவராஜா, மே.35**

> மருமகன் க. தேவராஜா, மே.35. எழுதிய சுதந்திரம் வந்தது என்ற கட்டுரையைச் சென்றவாரம் பிரசுரித்தேன். இவ்வாரம் நாமக்கல் கவிஞர் என்ற கட்டுரையைப் பிரசுரிக்கிறேன். மற்றைய மருமக்கள் என்மேற் கோபிக்கலாம். இதன் காரணத்தை அடுத்தவாரம் கூறுவேன்
> —கே. மா.

1947-ம் ஆண்டு ஒகஸ்டு மாதம். அன்றுதான் கவிஞர் நம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார். அவர் அன்று பேசிய சொற்பொழிவு இன்றும் நம் காதில் வெண்கல நாதம்போல் ஒலிக்கின்றது.

கவிஞரைப்பற்றிப் பேச வாயெடுத்தவுடன் நமக்கு எந்த நேரத்திலும் ஒரு பாட்டுத்தான் ரீங்காரம் செய்கின்றது. அது என்றென்றும் நமது காதில் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது.

"கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர்"

இந்தப் பாட்டுப் புதுமையானது. தமிழ்நாட்டின் தெருக்களில் ஒவ்வொருவனும் பாடிச்சென்றார்கள். பாலர் முதல் பண்டிதர் வரை பாடிச் சென்றனர். இந்தக் கவிதைத் தந்தவர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையவர்கள்.

மோகனூர் வெங்கட்ராமனின் கடைசிப்பிள்ளைதான் இவர். இவர் பிறந்தவுடன் தகப்பனர் இவருக்கு இராமலிங்கமென்று நாமம் சூட எண்ணத் தாயார் இவருக்கு "கருப்பண்ணன்" என்றுதான் வைப்பதாகக் கூறி நாமதேயத்தை சூடினர். இவருடைய பெற்றோருக்குப் பெண்பிள்ளைகளாகவே பிறந்தார்கள். இதனல் இவருடைய தாயார் தான் பூஜித்து வரும் தெய்வம் கருப்பண்ணசாமிக்கு ஆண்பிள்ளை பிறக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். அப்படிப் பிறந்தால் "கருப்பண்ண"னென்றே வைப்பதாக வேண்டிக்கொண்டார். ஆனல் தகப்பனர் விடுவாரா. தான் இராமலிங்கமென்றே அழைத்து வருவேனென்று கூறினர். ஈற்றில் தாயார் மாத்திரம் இவரைக் கருப்பண்ணன் என்று அழைத்துவந்தார்.

இவர் கோயம்புத்தூரிலே தன் படிப்பை ஆரம்பித்து மட்ரிக்குலேஷன் வரையில் படித்துத் தேறினர். இவர் இளமைப் பருவத்திலேயே சித்திரம் வரைவதில் வெகு சாமர்த்தியசாலியாகவிருந்தார். இவருக்கு 1909-ம் ஆண்டில் விவாகம் முடிந்தது. இதனல் இவர் மேற்படிப்பை ஆரம்பிக்கவில்லை.

இது இப்படியிருக்க, இவருடைய தகப்பனர் இவரை அரசாங்க உத்தியோகத்தில் சேர்க்க எண்ணினர். பொலிஸ்காரனகச் சேர்த்துவிடலாமெனவும் எண்ணினர். இதையறிந்த கவிஞர் உடனே வீட்டைவிட்டு ஓடிவிட்டார். பின்பு ஒருநாள் தந்தையார் இவரை ஒரு லிகிதராக ஆக்கலாமென எண்ணி அவருடைய தூண்டுகோலால் இவரைக் கச்சேரி லிகிதர் ஆக்கினர். சொற்ப காலம் இத்தொழிலில் ஈடுபட்டுப் பின் அதிபரிடம் எதிர்மாருக நடந்து தன்பதவியைப் பரித்தியாகம் செய்தார்.

ஒரு முறை ஒரு துரை இவருடைய சித்திரங்களை எங்கேயோ பார்த்து விட்டு, இவரைத் தேடி அழைத்தார். துரை இவரைக் கண்டு தன் இறந்த குழந்தையின் படம் ஒன்று இருக்கிறதாகவும், இதைக்கொண்டு குழந்தையின் உயிரோவியத்தை சித்தரித்துத்தர முடியுமோ என்று கேட்டார். உடனே கவிஞரும் 'ஆம்'என்று தலையசைத்து அதை வரைந்து கொடுத்தார். படத்தைப்பார்த்த துரை, மிகவும் ஆசைப்பட்டு இவரில் சந்தோஷங்கொண்டு அவர்கேட்ட பணம் ரூபா ஐம்பதைக்கொடுக்காமல், தன் பையிற்கையை விட்டு கைக்குள் வந்த கோட்டுகளை அப்படியேகொடுத்தார். இதை எண்ணிப்பார்த்த கவிஞர் அறுநூற்றிஎழுபத்தைந்து ரூபாய்இருக்கிறது, "இவ்வளவு ரூபாயும் எனக்கா? நான் கேட்டுக்கொண்டது ரூபா ஐம்பதுதானே. இந்தாருங்கள் மிகுதிப்பணத்தை" என்று கொடுக்கப்போனர். உடனே துரை அவருடைய உண்மையையும் ஒழுக்கத்தையும் கண்டு சந்தோஷித்து நீரே வைத்துக் கொள்ளும் என்றார். அதுபோல் இன்றும் இந்த ஒழுக்கம் இருந்து வருகிறது.

இவர்சித்திரக் கலையில்மட்டுமல்ல கவிதையிலும் சிறு பராயத்திலிருந்தே கவிதா வெள்ளம் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது. இவருடைய சித்திரத்திறமைக்கும் கவிதா சக்திக்கும் நாடகக் கம்பனிகள் இவருக்கு உதவியாயிருந்தன.

தேசியஉணர்ச்சி வளர்ந்து வந்தது. 1906ம்வருஷம் வங்காளப் பிரச்னையில் சேர்ந்து தொண்டாற்றினர். சுதந்திரத்தைப் பற்றிய புதிய உணர்ச்சியும், ஊக்கமும், நம்பிக்கையும் வைத்தார். 1921ம்ஆண்டு முதல் 1930-ம் ஆண்டு வரை தமது ஊராகிய நாமக்கல்லிலும் வேறு ஊர்களிலும் பிரசங்கங்கள் செய்தார். சுதந்திரவீறு கொண்டெழும்பினர். மக்களிடையே ஒரு பரபரப்பை உண்டுபண்ணினர். பின்பு காந்திஜியின் சத்தியாக்கிரகப் போரிற் சேர்ந்து சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டுச்சிறை சென்றார். தண்டனை பெற்றுமீண்டும் பழையமாதிரி சேவை செய்தார். இவர் காந்திஜியில் அபார பக்தி பூண்டவர். காந்திஜியேதன் குருவெனமதிப்புக் கொண்டவர். உத்தமவாழ்க்கை வாழ்பவர். இவர் சதாசிரித்தமுகத்துடன் இருப்பார். ஏழையென்றும் அடிமையென்று பார்ப்பதில்லை. அன்புகனிய யாருடனுமே பேசுவார். இவரைக் காந்தீயக் கவிஞர் என்று கூறல் மிகையாகாது. இவருடைய அறுபதாவது ஆண்டு மணிவிழா 5ம் தேதிகோயம்புத்தூரில் நடந்தேறியது.

### பிறந்ததின வாழ்த்துக்கள்

27-2-49—5-3-49

மே.28. சு. பிரேமசம்பு: கீ.70. வி. கணபதிப்பிள்ளை; மே.123. ச. கமலாவதி; மே.127. பொ. புனிதவதி; கீ. 164. இ. மகேஸ்வரசர்மா; மே.175. சி. சரவணபவன்; மே. 185. வீ. பி. நடராசா; மே.77. க. பராசக்தி; மே.108. வை. பத்மாஜனி; மே. 140. க. கனகராசா; கீ.199. பொ. காராளசிங்கம்

●

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக!

### ஒ...ன்...று—ஒன்று

மருமகன் லோ. ஜேம்ஸ், மே.216. ஒரு சிறு விளையாட்டுத் தருகிறார். அதை ஆடிப்பாருங்கள் —

●

பத்து'காட்போட்'அட்டைத்துண்டுகள் வேண்டும். ஒவ்வொன்றும் ஒரு சதர அங்குலத்தில் இருக்க வேண்டும். அதில் ஒவ்வொன்றிலும் 1 தொடக் 10 வரையும் எழுதுங்கள். எழுதியாய் விட்டதா? சரி, அவைகளை 10. 5. 3. 1. 7. 8. 4. 6. 2. 9. என்று வரிசையாக அடுக்குங்கள். இடது புறத்திலிருந்து ஒ...ன்...று...என்று சொல்லி அதற்கடுத்த 'காட்'டை எடுத்துப்பார்த்தால் அதில் 1 தானே எழுதியிருக்கிறது. 1ஐ ஒரு புறமாக வையுங்கள். இ...ர...ண்...டு என்று சொல்லிக்கொண்டு அடுத்த எண்ணிலிருந்து எடுங்கள். அதற்கடுத்த காட் 2 ஆகத்தானிருக்கும். இப்படியாக 10 ஐயும் எடுத்து அடுக்கி வையுங்கள். ஆடிப்பாருங்கள்.

### கரடுமுரடு

கீழ்வரும் பகுதியை என் மருமகன் ஒருவர் எழுதிய சிறுகட்டுரையிலிருந்துஎடுத்து உங்களுக்குத் தருகின்றேன். அதிற்காணப்படும் பிழைகளைத்திருத்தி எனக்கனுப்பினாலும் சரி, அல்லது உங்கள் ஆசிரியர்களுக்குக் காண்பித்தாலும்சரி— எதுவாயினும்சரி...

"சிற்ரூர் என்னும் கிராமத்தின் ஒற்ரையடிப்பாதையால் போகும்பொழுது, ஒரு வற்ராஊற்ற வளிந்து ஒருதடாகத்தை நிரப்பிக் கொண்டே இருந்தது. அக்குழத்தில் பொற்ராமரைகள் பல மலர்ந்து இருந்தன. அதன் பக்கலில் நிற்கும் வெற்றிலைக் கொடிக் கருகாமையில் ஒருசிற்ப்ப சாஸ்த்திரியின் கைத்திரனைக் காட்டும் ஒரு உருவம் இருக்கிறது, அதற்கு கர்க்கண்டு, சற்க்கரை, வற்ராழக்கிளங்கு, வைத்துக் கற்பூர தீபாராதனையும் செய்வர் சிற்ரூரார்........"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நல்லதம்பி

## உத்தம திரைச் சித்திரம்

சிலகாலமாக ஒரு சில தமிழ்ப் படங்கள் ஓரளவுக்குத் திருப்தி அளித்துவருவது உண்மைதான். படம் பிடிப்பதிற் கையாளப்பெற்று வரும் தமிழ்நாட்டுப் பழைய முறைகளை ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு, ஏதோ முற்போக்கான பாதையில் அடி எடுத்து வைத்த பெருமைக்குச் சில பட முதலாளிகள் பாத்திரராக இருக்கின்றனர். தமிழ்ப்படம் பார்ப்பதென்றால் தலைவலியை விலைக்குவாங்கிக்கொள்வதென்ற அபிப்பிராயமே பலரிடமிருந்துவருகின்றது. இந்தக் குறைபாடு இப்போது நீங்கி வருவது மகிழ்ச்சிக் குரிய செய்தியாகும்.

நல்லதம்பிப் படத்தைத் திரையிற் பார்த்த பின்னர் இந்த அபிப்பிராயம் நன்கு உரம் பெறலாயிற்று. ஜமீன் முறையை ஒழித்துக் கூட்டுப் பண்ணை முறையை அமைத்து, நாட்டுமக்களின் இன்னல்களைத் தீர்ப்பதற்கு நல்லதம்பி செய்துவரும் வேலைகள் பணக்காரக் கும்பல்களுக்கே சாவு மணி அடிப்பதாகின்றது. கதை முழுவதும் பொதுவுடைமைக் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டுபின்னப்பட்டிருப்பதுடன், கண்மூடி வழக்கங்களாற்றான் தமிழரின் பெருமை மண்மூடிப் போயிற்றென்பதையும் ஆங்காங்கே அற்புதமாக எடுத்துக் காட்டும் பிரசாரப்படமாகவும் அமைந்துள்ளது. இத்தனைக்கும் எவருடைய உள்ளத்தையும் புண்படுத்தாத முறையிற் கதை அமைந்துள்ளது. கதையும் வசனமும் அறிஞர் ஸி. என். அண்ணாத்துரை அவர்களின் வார்ப்பென்றால் அப்புறம் அதன் செம்மையைப் பற்றிப் பேச வேண்டியதில்லை.

கிருஷ்ணன் தம்பதிகளின் நகைச் சுவை முன்னைய பல படங்களில் உயர்ந்தனவாக இருப்பதில்லை. ஆனால் நல்லதம்பியில் என். எஸ். கிருஷ்ணன் உயர்தரமான நகைச்சுவையை வழங்கியிருப்பதுடன், கீர்த்தியின் உச்சத்தையும் எட்டிப்பிடித்திருக்கின்றார்.

கிராமிய நிகழ்ச்சிகளும், சித்திரங்களும் தெருக்கூத்தும் அப்பழுக்கற்ற முறையிலே திரையிற் காட்சி தருகின்றன. உழவன் பாட்டும் கிராமிய நடனங்களும் பார்ப்போரைப் பரவசப்படுத்தி விடுகின்றன.

பிரசாரத்தைக் குறிக்கோளாகக்கொண்டு பிடிக்கப்பட்ட இப்படத்திற் சமுதாயச் சீரமைப்புக்கும், கிராமச் செல்வத்தைப் பெருக்கி நாட்டுமக்களின் நலன்களைப் பேணுவதற்குமான யோசனைகள் நிரம்ப இருக்கின்றன. பார் முழுதும் ஏர் முனை விலே என்ற தத்துவத்தை இப்படம் தமிழ் நாட்டுக்கு மட்டுமன்றி அகில உலகத்துக்குமே உணர்த்தி வைக்கின்றது.

தனிப்பட்டவர்களுக்கு நிலம் சொந்தமாக இருக்கும் முறை சமூக விரோதமானது. தேவைக்கு வேண்டிய தானிய வகைகளை உற்பத்தி செய்யப்படும் நிலம் சமூகத்தின் பொதுச்சொத்தென்பது காந்திஜியின் நிர்மாணத் திட்டத்தில் ஓர் அம்சமாகும். இது


[கிராமப் பெண்]

போன்ற பல சமூக உண்மைகளை மக்களுக்கு விளக்கிவைக்கின்றது நல்லதம்பி.

அழிந்தொழிந்து வரும் கிராமியக் கலைகளையும் நாம் பாதுகாத்து வளர்க்க வேண்டுமென்பதையும் சில கட்டங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

படக் கலைச் சூட்சுமங்களும் இயற்கை அழகுகளும் இப் படத்தில் நன்கு அமைந்துள்ளன வென்பதே எனது அபிப்பிராயம். பாடல்களும், இன்னிசையும் வசனமும் நன்று. மூன்று மணி நேரம் அமர்ந்து படம் பார்க்க வேண்டியதாயினும் அவ்வளவு நேரமுங் கணப்பொழுதில் ஓடி மறைகின்றது. இது கதையின் கவர்ச்சிக்கு ஒரு சான்றெனக் கருதுகின்றேன். தவிர, உள்ளத்தை தொடும் கட்டங்கள் நல்லதம்பியிற் பல வுள. அத்துடன் நடிகர்கள் அனைவரும் தங்கள் பகுதிகளை நன்கு நடித்திருக்கின்றனர். சகஸ்ரநாமம் கச்சிதமாக நடித்திருக்கின்றார். படத் தயாரிப்பை மேற்பார்வை செய்த கிருஷ்ணன், பஞ்சு ஆகிய இருவரையும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

எங்கள் நாட்டிற் கலைவளர்ப்பதற்குக் கச்சை கட்டிக் கொண்டு நிற்கும் போலிக் கனதனவான்களும், இலங்கைப் பிரதிநிதிகள் சபை அங்கத்தினரும், மந்திரிசபையினரும் நல்லதம்பியை ஒரு முறை பார்ப்பார்களாகில் ஒரு வேளை அவர்களும் பயன் அடையக் கூடும்!

நல்லதம்பி ஒரு நல்லபடம். தமிழ் மக்கள் பெருமைகொள்ளத்தக்க படம். மக்கள் வாக்கு, மகேசன் வாக்கு என்பதை உணர்த்தும் படம். இது எனது சொந்த அபிப்பிராயம்.

—அரியரத்தினம்

## இசை அரங்கு

சென்ற சனிக்கிழமை (19-2-49) இரவு உடுவில் இசைத்தமிழ் நிலையத்தாரின் ஆதரவில் உடுவில் கிராமசமூக நிலைய மண்டபத்தில் 6 வது இலவச இசையரங்கு நடைபெற்றது.

முதலாவது நீர்வேலி திரு நடேசன் அவர்களின் பாட்டுக் கச்சேரி, சித்திவிநாயகம் அவர்களின் பிடில் வாத்தியத்துடனும், கோவிந்தப் பிள்ளையவர்களின் மிருதங்கவாத்தியத்துடனும் சிறப்பாக நடைபெற்றது. பாடகர் நல்ல இராகபாவத்துடன் பாடினார். இதற்குப் பொருத்தமாகவும் அனுசரணையாகவும் பிடில் வாசித்தார் சித்திவிநாயகம் அவர்கள் மிருதங்க வாத்தியம் அன்று சுமாராகவேயிருந்தபோதிலும் தனி ஆவர்த்தனத்தில் மிருதங்கமும் கடமும் (மணிஐயர்) மாறி மாறி வாசித்தபோது இரசிகர்கள் நன்கு அனுபவித்தனர்.

அடுத்தபடியாக க. ஏ. கணேசன் அவர்களது நடனம், அவர்களது பக்கவாத்தியங்களுடன் இரசிகர்கள் மெய்மறந்திருக்கக் கூடிய நிலையில் அமைந்திருந்தது.

கடைசியாக தியாகு அவர்களின் நாதன இசைக் கச்சேரியானது இரசிகர்களை மிகவும் உற்சாகமூட்டியது. அன்றைய நிகழ்ச்சிகளில் முதல் இடம் பெற்றது. சிறுவர்களுக்கும் ஆர்வமூட்டியது.

நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கு முன் திரு இராமச்சந்திர ஐயர் அவர்கள் இசைத்தமிழ் நிலையத்தின் அமைப்பைப்பற்றியும் சேவையைப் பற்றியும் குறிப்பாகப் பேசினார்கள்.

இடையில் இசைத் தமிழ் நிலையத்தின் அறிவித்தல் ஒன்றை திரு கே. தனபாலசிங்கம் அவர்கள் சபையோருக்கும் தெரிவித்தார்கள்.

அதாவது மார்ச் 1 ந் தேதி முதல் சனி ஞாயிறு தோறும் நடனவகுப்பும் பிடில், மிருதங்க வகுப்புகளும் நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## சங்குவேலி கிராம விருத்திச் சங்கம்

மேற்படி சங்கம் 12-2-49 சனிக்கிழமை மாலை 7 மணியளவில் சங்குவேலி சைவவித்தியாசாலை மண்டபத்தில் ஸ்ரீ எஸ். யே. வி. செல்வநாயகம் அவர்களை வரவேற்று அக்கிராமத்தின் அவசிய தேவைகளைப்பற்றி ஒரு அறிக்கை சமர்ப்பித்தது.

சங்கத்தலைவர் ஸ்ரீ வி. வி. இராசா தலைமைவகித்தார். பின்வருவன சங்கத்தலைவரால் பிரதிநிதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

1. இக்கிராமத்திலுள்ள குளங்களைத் திருத்தி அமைத்தல்.
2. மாட்டுத்தீன்பற்றி உள்ள கஷ்டம்.
3. காணியில்லாதவர்களுக்குக் காணி வழங்குதல்.
4. [illegible] இலவச மருந்துச்சாலையம்.
5. சங்குவேலிச் சுடலைக்குப் போவதற்குப் பாதை.

கந்த புராணம் - வசனம்
வித்துவான் என். வி. முத்துக்கிருஷ்ண ரெட்டியார் இயற்றியது.
ஆறுமுகப் பெருமானின் அழகிய மூவர்ணப் படத்துடன் கூடியது.
விலை ரூ. 5-12-0 :: தபாற்செலவு தனி
உமாதேவன் கம்பெனி
16, செம்புதாஸ் தெரு, த. பெ. 1584 சென்னை - 1

ஆசிரியர்க்குக் கடிதம்

## மகா சிவராத்திரி நிர்ணயம்

இந்த மாசிமாதம் 14-ந் தேதி வெள்ளிக்கிழமை மகா சிவராத்திரி எனத் திருக்கணித பஞ்சாங்ககாரரும், கும்பகோணம்—ஜகத்குரு—சங்கராசாரிய சுவாமிகள் மடத்துப் பஞ்சாங்ககாரரும் குறித்திருக்கின்றனர். வாக்கிய பஞ்சாங்ககாரர் 15-ந் தேதி சனிக்கிழமை எனக் குறித்திருக்கின்றனர். இதில் எது கொள்ளத்தக்கது? எது தள்ளத்தக்கது? என்பது பொதுவான சைவர்களுக்குத் தெரியாதாகின்றது.

மாசிமாத கிருஷ்ணபக்ஷத்துச் சதுர்த்தசி அர்த்தராத்திரியில் என்று வியாபித்திருக்கிறதோ அன்று மகா சிவராத்திரி கொள்ள வேண்டியது விதி. வாக்கிய பஞ்சாங்கப்படியும் வெள்ளிக்கிழமை அர்த்தராத்திரி வியாபகமிருக்கிறது. அன்றியும் திரயோதசி சம்பந்தமும் திருவோணசம்பந்தமும் விசேடமாக அமைந்திருக்கின்றன. மற்றைநாள் விலக்கப்பட்ட அமவாசை சம்பந்தக் குற்றம் இருக்கிறது. அதற்குப் பரிகாரமாகிய திருவோண சம்பந்தமுமில்லை. அன்றியும் அது வைதிகர் விரதத்தார்களுக்கே உரியது. சைவர்கள் முதல்நாள் கொள்ளல் வேண்டும் என்பது விதி.

இனி அர்த்தராத்திரிக்கு முன் கூடில் அன்றும், பின் மிகுந்தால் அடுத்தநாளும் கொள்ளல் வேண்டும் என்ற விதியின்படியும் வாக்கிய பஞ்சாங்கத்தில் வெள்ளிக்கிழமை அர்த்தராத்திரிக்குமுன் 1 நாடி 55 விநாடியும், சனிக்கிழமை அர்த்தராத்திரிக்குப்பின் 1 நாடி 47 விநாடியும் சதுர்த்தசியிருக்கிறது. முதல்நாள் அர்த்தராத்திரிக்குமுன் கூடியும் அடுத்தநாள் அர்த்தராத்திரிக்குப்பின் மிகுந்தும் இருந்தால், எந்த இரவில் சதுர்த்தசி அதிகமிருக்கிறதோ அன்று கொள்ளல்வேண்டும்என்ற விதியின்படியும் மேற்படி பஞ்சாங்கத்தில் வெள்ளிக்கிழமை இரவு 17 நாடி 10 விநாடியும், சனிக்கிழமை இரவு 17 நாடி 5 விநாடியும் சதுர்த்தசி இருக்கிறது. இவைகள் வெள்ளிக்கிழமையே சிவராத்திரி கொள்ளல் வேண்டுமென்பதைக் காட்டுகின்றன.

காரணகமத்தில் "கும்பராசியில் சூரியன் வந்த மாதத்தில் கிருஷ்ண பக்ஷத்தில் திரயோதசியோடு கூடிய சதுர்த்தசியில் மகா சிவராத்திரி (கொள்க)" எனவும்,

காமிகாகமத்தில் "திரயோதசியோடு கூடியதை விடுத்து அமாவாசையோடு கூடியதை அனுஷ்டித்தால் அந்தச் சிவராத்திரி புருடர்களுக்குப் பயத்தைத்தரும் இராசாவுக்குக் கேட்டைத்தரும்' எனவும்,

விரத சூடாமணியில் "மகாபாவங்களுக்கும் பிராசச்சித்தம் முன்னர் (நூல்களில்) காணப்பட்டுள்ளது; அமாவாசையோடு கூடிய சதுர்த்தசியில் சிவராத்திரி அனுஷ்டிக்கிற புருடர்களுக்குப் பிராயச்சித்தம் (யாண்டும்) காணப்படவில்லை" எனவும்,

வைத்தியநாத தீக்ஷிதியத்தில் "திரயோதசிச் சேர்க்கை புகழப்படுவதாலும், அமாவாசைச்சேர்க்கை இகழப்படுவதாலும், முன்தினத்திலேயே (சிவராத்திரி) உபவாசம் (கொள்ளத்தக்கது)" எனவும்,

மகுடாகமத்தில் "சோதிடத்துக்கும் ஆகமத்துக்கும் மாறுபாடு உண்டாயபோது, சோதிடத்தையேவிடுத்து ஆகமத்தையே ஆசரிக்கவேண்டும்; (என்னை?) பூசை, எந்தச் சாத்திரப்படி செய்யப்படுகிறதோ அந்தச் சாத்திரமல்லவா பிரதானம்" எனவும் கூறப்பட்டிருக்கும் விதிகளின்படி 14-ந் தேதி வெள்ளிக்கிழமையே மகா சிவராத்திரி கொள்ளத்தக்கதென்பது தெளிவாகின்றது. பாரணத்திற்கு வசதியான நாளை நியமித்துக்கொண்டு விரதமனுஷ்டிப்பதில்லை. விரதம் பிரதானம்; பாரணம் அதற்கு அங்கம்.

ச. வேலுப்பிள்ளை

சடையாளி,
காரைநகர் 16-2-49

குறிப்பு: இக்கடிதம் இடமின்மையாற் சென்றவாரம் பிரசுரமாகவில்லை. ப-ர்.

### கடிதர்க்கு விடை

எஸ். ஆனந்தகுமாரன்
இசைக்கல்லூரி,
வண்ணார்பண்ணை.

N. C. O. M. S சங்கீதப் பரீட்சைகள் சம்பந்தமான சந்தேகங்கள், பாடத்திட்டங்கள் என்பவற்றுக்கு அச் சங்கத்தின் செயலாளருக்கு எழுதி அறிந்துகொள்க.

சங்கீத வகுப்பு
மேற்குறிக்கப்பட்ட வகுப்பு பங்குனிமீ 1உ தொடக்கம் வாரந்தோறும், திங்கள் வியாழக் கிழமைகளிற் பிற்பகல் 4 மணி தொடக்கம் 5½ மணி வரையும் சனிக்கிழமைகளில் முற்பகல் 9 மணி தொடக்கம் 12 மணி வரையும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறும்.
வட இலங்கைச் சங்கீத சபையாரால் வெளிப்படுத்தியுள்ள பாடத் திட்டத்திற்கமைய பாடங்கள் கற்பிக்கப்படும். கீழ்வகுப்பு, மத்திய வகுப்பு, மேல்வகுப்பு என மூன்று வகுப்புகள் உள. அவரவர் திறமைக்குத் தக வகுப்புகளிற் சேர்த்துக்கொள்ளப்படுவர். விரும்புவோர்க்குப் பரத நாட்டியமும் கற்பிக்கப்படும்.
ஆசிரியர்கள் :- 1. சங்கீதபூஷணம் A. சோமசுந்தரம்-வாய்ப்பாட்டு; 2 சங்கீதபூஷணம் S. சோமசுந்தரம்-வாய்ப்பாட்டு; 3. வித்துவான் K. சண்முகானந்தம்-வயலின்.
சம்பள விகிதம்:- (மாதமொன்றுக்கு) (1) கீழ்வகுப்பு ரூ. 3-00; (2) மத்தியவகுப்பு ரூ. 5-00; (3) மேல் வகுப்பு ரூ. 7-50; பிரவேச கட்டணம் ரூ. 2-00.
இவ்வகுப்புகளிற் சேர விரும்புவோர் விரைவிற் கல்லூரி அதிபர் அவர்கட்கு அல்லது காரியதரிசி அவர்கட்கு மனுச்செய்துகொள்ளவும்.
அ. சோமசுந்தரம், காரியதரிசி.
யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.
[3618]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ப் பலி

சொக்கன்

தொடர் கதை

19

ஐந்து வருட காலம் முன்னுக்குச் செல்கிறேன். அப்பொழுதுதான் நானும் புவனுவும் ஆசிரியகலாசாலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டோம்.

அந்த முதனுட் சந்திப்பு ஆ! ஓர் இனிய கனவு போன்றல்லவா அது என் மனக்கண்முன் பவனிவருகிறது. எத்தனை ஆயிரம் வருடங்கள் பெண் வாடையற்ற ஓர் உலகத்தில் வாழ நேரிட்டாலும் அந்த ஒரு நினைப்பு மட்டும் என் மனதில் இருக்கும்வரை என் உற்சாகம் குறையவே மாட்டாது; நிச்சயமாக.

அவளும் என்னைப்பார்த்தாள்; நானும் பார்த்தேன்; என் பார்வையில் அர்த்தம் இருந்தது. அவள் பார்வையில்.......? 'அர்த்தம் இருந்தது' என்று அன்றைக்கு நான் நினைத்து உவகைக் கடலில் மூழ்கியதுண்டு!

ஆனல் அதன் பின்புநடந்த சில நிகழ்ச்சிகளால் 'நிச்சயமாக அப் பார்வையில் அர்த்தமே யில்லை' என்று அறிந்தேன்.

ஆசிரிய கலாசாலையின் முதல் நாளன்று பின்னேரம் எங்கள் விடுதிச்சாலையில் வம்பர் மகா சபை (மாணவர்கள் கூடிப் பேசினதைச் சொல்கிறேன்) கூடியது. பேச்சு முழுவதும் எங்கள் சகா மாணவிகளைப் பற்றி; விசேஷமாகப் புவனுவைப்பற்றி. ஏன்? அந்தக் குழுவுக்குள் மிக அழகியாக, கவர்ச்சி வாய்ந்தவளாக அவள் இருந்தகுற்றத்திற்காக?

'கிளி போலவே இருக்கிருள்' என்ருன் வரதராஜன், கண்ணைச் சிமிட்டிக்கொண்டு.

'அதற்கு ஒரு பூனைதான் தேவையாகவிருக்கிறது' என்று தனக்கே உரியதான கிண்டற் பாணியிற் பேசினுன் இராஜலிங்கம்.

'எல்லோரும் அவளைப்பற்றியே பேசுகிறீர்களே; மற்றப் பெண்கள் பெண்களாகவே தோன்றவில்லையோ உங்கள் கண்களுக்கு' என்று தன் சந்தேகத்தை வெளியிட்டான் குமாரவேலு.

'பெண்கள் பெண்களாகவே தோன்றுகிருர்கள். எங்கள் போன்ற வாலிபரின் மதிப்புக்குரியவளாகத் தோன்றுபவள் புவனு ஒருத்திதான்.' நான் இவற்றைச் சொன்னேன்; என்மன எழுச்சியை அடக்க முடியாத நிலையில்தான் அந்தவார்த்தையைச் சொன்னேன்!

'அடே! ஆச்சரியமாயிருக்கிறதே. இதற்குள் அவள் பேரை எப்படி அறிந்தாய்! நீ பலேபேர்வழியாயிருக்கிருயே' என்ருன் முருகானந்தன்.

நான் சிரித்துவிட்டு மௌனமாயிருந்தேன். அந்த மர்மத்தை வெளியிடவே யில்லை!

சாப்பாட்டு இடைவேளைக்காக எல்லோரும் போனபின்பு நான் போய் அவள் புத்தகங்களைப் பரிசோதனை செய்தபொழுது கிடைத்த உளவு தானே இது.

20

'எட்டாக் கனிக்குக் கொட்டாவி விடுவது' என்பார்கள். நானும் இந்த வீண் முயற்சியிலேயே ஈடுபட்டிருந்தேன்.

வகுப்பிற் பாடம் நடந்துகொண்டிருக்கும்; எனக்குப் பாடத்திற் கவனம் இருக்கவே இருக்காது. காந்தத்தின் பக்கத்தில் இரும்பு வைக்கப்பட்டிருந்தால் என்ன கதி ஏற்படுமென்பது சொல்லித் தெரியவேண்டியதல்ல.

நான் என்னையறியாமலே அவள்பக்கம் இழுபட்டுக்கொண்டிருந்தேன். என் கண்கள் அவள் அழகைப் பருகுவதன்றி வேறொன்றறியா! என் இருதயம் 'புவனு ஒருமுறையாவது என்னைப் பார்க்காளா?' என்று ஏங்கும்.

ஆனல் புவனுவுக்கோ என் அவஸ்தையைபபற்றிய அக்கறையே இருப்பதில்லை. அவள் ஓர் விசித்திரப் பிறவி. நான் பார்ப்பதை அறிந்தாளோ இல்லையோ? கடுகடுத்த முகத்துடன் மறுபக்கம் திரும்பிவிடுவாள்.

நான் அவள் பார்க்கக்கூடாத அவ்வளவு அவலட்சணமாகவா இருக்கிறேன்? என்று நான் அடிக்கடி சிந்திப்பதுண்டு.

இந்தச் சிந்தனை வியர்த்தமான சிந்தனை; தன்னடக்கமாக நான் என்னை அழகனில்லை என்று சொல்லிக்கொள்ளலாம். ஆனல் உண்மையாகவே நான் அழகன்தான் என்பதை மறுப்பதற்கில்லை. தற்புகழ்ச்சி என்று எடுத்துக் கொள்பவர் எடுத்துக் கொள்ளட்டும். நான் அழகன்!

என்னுடைய அழகு என்ற மூலதனத்தைக்கொண்டு காதல் வியாபாரம் செய்ய முயற்சிக்கிறேன் என்றுகூட நினைப்பீர்கள். அழகு ஒன்றைக்கொண்டு மட்டும பெண்களைக் கவர்ந்துவிடலாமென்று நினைப்பது பைத்தியகாரத்தனமென்று நான் அறிந்திருந்தேன்.

நான் படிப்பிலும் மட்டமென்று சொல்லமுடியாது; உணர்ச்சிததும்பப் பேசும் பேச்சாளன்என்றும், சிறந்த கட்டுரையாளனென்றும் சகா மாணவர்கள் என்னைப் புகழ்வார்கள் அந்நாளில். இவைஎல்லாவற்றையும்விட நான்ஓர் உற்ஸாகமான சோம்பலற்றபிறவி!

எனக்கு இவற்றைச் சொல்ல வெட்கமாகத்தான் இருக்கிறது! ஆனுலும் புவனுபோன்ற அழகான சுறுசுறுப்பும், இளமையும், புத்திசாலித்தனமும் வாய்ந்த ஓர் யுவதி விரும்பத்தக்க சகல அம்சங்களுமஎன்னிடம் இருந்தனஎன்று நான் சொன்னல் அது தற்பெருமையல்ல; சகாமாணவர்களாலும் ஒப்பமுடிந்தஒன்று.

இது தற்பெருமையென்று நினைக்கிறீர்களா?

21

எனக்குப் பெண்களுடன் நடந்துகொள்ளும் விதம் தெரியாது! நான் இதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

பெண்களைப் புகழ்மொழிகள் திருப்திப்படுத்துகின்றன என்பதை நான் அன்று அறிந்திருக்கவில்லை; அவர்களிடமுள்ள குறைகளை எடுத்துக் காட்டுவது கட்டாயமாகக் கூடாது என்றும் அறிந்திருக்கவில்லை. நான் ஒரு முட்டாள்.

இந்த ஒரு குறைபாடுதான் என் தோல்வியின் முதற்படி!

நான் அப்பொழுது எங்கள் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தேன். புவனு மாணவர் தேர்ச்சிச் சங்கத்தின் காரியதரிசி!

இந்தப் புவனுதான் எவ்வளவு கெர்வம்வாய்ந்தவள்? ஒரு சிறு காரியதரிசிப்பதவியைக் கண்டுவிட்டு இவள் எப்படியெல்லாம் துள்ளி அடிக்கிருள்?

எனக்கு கோபம்கோபமாய் வந்தது ஒரு காதலனென்ற முறையில் அவள் குறைபாடுகளை நிவர்த்திக்க முயற்சித்தேன்! கொக்கு தன் தலையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு உலகமே தன் தலையில் இருப்பதாக எண்ணுமாம்! எனக்கும் நான் புவனுவின் காதலனென்ற எண்ணம்.

அந்த மாதப் பத்திரிகையிற் 'சங்கப்பலகை' என்ற தலையங்கத்துடன் நான் எழுதிய கட்டுரையில் அவள் தற்பெருமையைச் சிறிது கிண்டல் செய்திருந்தேன். ஆனல் இது இவ்வளவு பிரமாதமானதாகப் புவனுவால் கொள்ளப்படுமென்று அறிந்திருந்தேனா?

அன்று பின்னேரம். (பத்திரிகை வெளியான அன்று) கோபத்தாற் சிவந்த முகத்தோடு அவள் என்னைச் சந்தித்தபொழுதுதான் காரியம் தலைக்கு மேல் போய்விட்டதை அறிந்தேன்! இவளுக்கு ஏன் இத்தனைகோபம்? எனக்கு ஆச்சரியமாயிருந்தது.

புவனு கேட்டாள்: "என்னை அவமானப் படுத்தவேண்டுமென்று எத்தனைநாள் காத்திருந்தீர்கள்".

நான் இதற்கு என்னபதிலைச் சொல்வது? அவளைத்திருத்தவோ, கிண்டல்செய்யவோ நான் யார்? நான் விழித்தேன்! குற்றவாளியைப் போன்று அவள் முன் தலைகுனிந்து நின்றேன்!

மீண்டும் அவள் சொன்னுள் இதனல் என்ன பலனைக் கண்டீர்கள்?

நான் சிரித்தேன்; விஷயத்தை மழுப்புவதுபோன்று என் மனோநிலையையும் தெளிவாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன். "வேறொருவராயிருந்தால் இன்னும் கூடிய அளவில் கிண்டல்பண்ணியிருப்பேன் நீங்கள் என்றபடியால்தான் திருந்துவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிப்பதற்காக அவ்விதம் எழுதினேன்" என்றேன்.

அவள் கோபம் எல்லை மீறுவதாகத் தோற்றியது; "நீங்கள் மட்டும் மிக நல்லவரோ குற்றங் குறைகளை இல்லாதவரோ" என்று புவனு கேட்டாள். இந்தச் சொற்களின் அர்த்தமென்ன? நான் சிந்தித்தேன், இவள் முதற்சொன்னவை, கோபததால் முகம் சிவத்தது எல்லாம் பாசாங்குதானே? ஒரு வேளை என் மனதை அறிய.

சீ இது என்ன பைத்தியகாரத்தனம்! காளிக்குச் சங்கரனைக் காலடியில் போட்டு மிதிக்கத்தான்தெரியும்: தொழுதேத்தத் தெரியுமா?

நான் மென்று விழுங்கிக் கொண்டு சொன்னேன். 'ஆனல் அந்த வார்த்தைகளிலும அர்த்தம் இருக்கத்தான் செய்தது! என்னில் உள்ள பிழைகளை எடுத்துக் காட்டித் திருந்தும்படி நீங்கள் சொனனல் நான் திருந்துவதற்கு இடம் உண்டு.'

அவள் உக்கிரம் அடைந்தாள். அவள் கண்கள் கோபக்கனலாற் சிவந்தன. இனியும் இப்படியாகத் தன்னை அவமானப்படுத்தினல் தான் அதிபரிடம் முறையிட வேண்டி ஏற்படும் என்றும் அதனல் என் மாணவ வாழ்க்கைக்கே முற்றுப்புள்ளி ஏற்பட்டாலும் ஏற்படலாமென்றும் அவள் சொன்னுள். இது அவள் முதல் எச்சரிக்கை. புவனு போய்விட்டாள்!

என் உள்ளத்தில் அவள் வார்த்தைகள் கூரம்புகள் போன்று தைத்தன. நான் மிகவும் வேதனை அடைந்தேன். காதல் தேவதையின் பலிபீடத்துக்கு முன்பாக என்னல் எவ்வளவாகப் பணிய முடியுமோ அவ்வளவு பணிந்தாலும் அவள் கடாட்சம் கிட்டாமல் இருக்கிறதே! என் செய்வேன்,

இந்த ஏமாற்றத்தை நான் எவ்வாறு சகிப்பது? வேண்டுதலும், பிரார்த்தனையும் என்றுமே தம் அடியவரைக் கைவிட்டதில்லை! நீ உறுதியாயிரு என்று மனம் என்னை ஆச்வாசப் படுத்தியது.

சில நாட்கள் சென்றன புவனுவால் ஏற்பட்ட உள்ள வடுவும் ஆறிக்கொண்டே வந்தது! மீண்டும் என் காதற் படையெடுப்பைத் தொடங்கினேன்.

(தொடரும்)

## நெடுந்தீவில் தபாற்பகுதி அதிகாரி

சமீபத்திலே தபாற்பகுதி அதிகாரி ஸ்ரீ பெரேரா அவர்கள் நெடுந்தீவுக்கு விஜயம் செய்தனர். அரசினர் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. ஏ நவரத்தினசிங்கம் அவர்கள்,நெடுந்தீவின் தபாற்தந்தி வசதியீனங்கள், அவற்ருல் மக்கள் படும் கஷ்டங்கள் என்பனவற்றை அதிகாரிக்குத் தெரிவித்தனர். நெடுந்தீவு மேற்குக் கிராம அபிவிருத்திச் சேவா சங்கத்தாரின் வேண்டுகோள் வாசிக்கப்பட்டபின், அதன் தலைவர் திரு. ஆ. கந்தையா, காரியதரிசி திரு. தி. கணபதிப்பிள்ளை என்போராலும், கத்தோலிக்க மத குரு சுவாமி டெசி அவர்களாலும் நன்றி கூறப்பட்டது.


## இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி
## THE CEYLON STATE MORTGAGE BANK

இந்த அரசாங்க ஈட்டு வங்கியிற் கடன்கள், பத்திரங்கள் மூலம் அசைவற்ற காணிகளின் பிணையிற் கீழ்க்காணும் விஷயங்களுக்குச் செலவுசெய்யும் பொருட்டுக் கொடுக்கப்படும்.

(1) கமத்தொழில் விஷயங்களுக்கும்,
(2) கட்டிடங்கள் கட்டுவதற்கும, விலைக்கு வாங்குவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும்.
(3) மேற்காட்டிய விஷயங்களின் பொருட்டுக் கடன் வாங்கி யிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கும்.
(4) ஏதாவது கட்டடங்கள் அல்லது காணியின் பேரிலுள்ள ஈடு மீளுவதற்கும்.

வட்டி விபரம் பின்வருமாறு:— கடன் எடுக்குந் தொகை 5,000 நபாவுக்குக் குறைந்திருந்தால் 6 வீத வட்டியும; 5,000 நபாவுக்குக் கூடியும் 10,000 நபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5½ வீத வட்டியும்; 10,000 நபாவுக்குக் கூடியும் 50,000 நபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5 வீத வட்டியும; 50,000 நபாவுக்குக் குறையாதிருந்தால் 4½ வீத வட்டியுமாம்.

கடன்கொடுக்கும் குறைந்த தொகை 2000 ரூபாவாகும். விபாங்கட்கு 'மனேச்சர்', இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி, இல. 127, கேமேல் பிளேஸ்', கொழும்பு, என்ற விலாசத்திற்கு எழுதி அறியவும்.

[3601]



## யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி
1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை:
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும், பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்

தினசரிப் பற்று வரவு:
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

[3600]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலவுப் பெருக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜாக்கிரதையாக இருக்கத் தவறினுல் பின்னர் காலையில் கால் முகங் கழுவுவதே பெரிய திண்டாட்டமாகிக்கொள்ளும்.

லபுகமை நீர்த்தேகத்திற் சுமார் 18 அடிவரை நீர் குறைந்துவிட்டது. மழையில்லாத வரட்சி குறைந்த பட்சம் மூன்று வார காலம் தொடர்ந்து நீடிக்குமாயின் தண்ணீர் நெருக்கடி உண்டாகியே தீரும்.

## நிஸங்கா உடை

சமீபத்திற் பிரதிநிதிகள் சபை கூடியபோது 'புஷ் கோற்' என்ற அரைக்கை மேற்சட்டையைச் சபையில் அணிவது சட்டவிரோதமானதெனச் சபைத் தலைவர் தெரிவித்திருந்தார். குருணுக்கற் பகுதிப் பிரதிநிதியே அன்று சபையிலே 'புஷ்கோற்' றுடன் காணப்பட்டார். ஸ்ரீ ஜயவர்த்தன அவர்கள் அணியும் "பேக்கரிமாமா" வின் 'கோற்' மாதிரி ஒன்றை மாட்டிக்கொண்டு ஸ்ரீ நிஸங்கா அவர்கள் சென்ற புதன்கிழமை பிரதிநிதிகள் சபை சம்பந்தமான நிர்வாகசபைக் கூட்டத்துக்குச் சென்றுர். அத்துடன் பர்மாக்காரர் கட்டிக்கொள்ளும் சாரத்தையும் உடுத்திக்கொண்டார். ஸ்ரீ நிஸங்காவின் கௌரவமே கௌரவம். இந்த உடைக்குச் சபைத்தலைவர் தடை விதிப்பாரோ இருந்து பார்க்கலாம்.


## நம்பிக்கையில்லை

பிரதிநிதிகள் சபைக் கட்டடத்தின்மீது சபைத்தலைவர், சபையின் அங்கீகாரமின்றி சிம்மக்கொடியையும், 'யூனியன் யாக்' கொடியையும் பறக்கவிட்டுள்ளார் இதை ஆட்சேபிக்கும் முகத்தால் பழைய மந்திரி ஸ்ரீ சுந்தரலிங்கம் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சமர்ப்பிக்க இருக்கின்றுர். இதற்குப் போதிய ஆதரவு கிடைக்குமோ தெரியவில்லை. ஒருவேளை புஸ்வாணமாகப் பொசுங்கிவிடவுங் கூடும்! தேசியக் கொடி சம்பந்தமாக அதிருப்தி கொண்டுள்ளவர்கள் ஸ்ரீ சுந்தரலிங்கம் அவர்களின் தீர்மானத்தை ஆதரிக்கக் கூடும்.

தேசியக்கொடி சம்பந்தமாக ஒரு முடிவு காணுவதற்கென நியமிக்கப்பட்ட சபையார் சமீபத்திற்கூடித் தமது கருத்தைத் தெரிவிப்பார்கள் எனத் தெரிகின்றது. இவர்களுள் மந்திரி ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களும் ஒருவர்.

## சீமைக்குப்பயணம்

வைத்திய முறைகளில் நல்ல பயிற்சி பெறுவதற்காக அரசாங்கம் 21 டாக்குத்தர்மாரைச் சீமைக்கு அனுப்புகின்றது. இவர்களில் 20 பேரை அரசாங்கம் தெரிந்துவிட்டதென அறியக்கிடக்கின்றது. இவர்கள் காது, மூக்கு, தொண்டை போன்ற பகுதிகளில் உண்டாகும்நோய்களைக் குணப்படுத்துவதற்கெனக் கண்டுபிடிக்கப்பட்ட நவீனமுறைகளிற் பயிற்சிபெறுவார்கள்.




The
EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
LARGEST CIRCULATION IN CEYLON, INDIA & MALAYAN UNION

Vol. 19 | Chunnakam, Sunday, Feb. 27, 1949 | No. 30

## வெள்ளவத்தையில் முத்தமிழ் விழா

இலங்கை வானொலித் தமிழ்க்கலை மன்றத்தினரால் அடுத்த மாதம் 4, 5, 6 திகதிகளில் வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலய மண்டபத்தில் முத்தமிழ்விழாக் கொண்டாடப்பெறும். ஸ்ரீ சோ. நடராஜா, ஸ்ரீ க. ச. அருணந்தி ஆதியோர் முத்தமிழ் பற்றிய சொற்பொழிவுகள் ஆற்றுவார்கள். மூன்று தினங்களிலும் இசைக்கச்சேரி நடைபெறும்.

## ஸி. லஷ்மி நாராயணன் பேராசிரியர் பிரிவு

தாம்பரத்திலுள்ள சென்னைக் கிறிஸ்தவகல்லூரியிற் 30 வருடகாலமாக விலங்கு நூற்பேராசிரியராகக்கடமை யாற்றிய ஸ்ரீ ஸி. லக்ஷ்மிநாராயணன் அவர்கள் நுங்கம் பாக்கத்திலுள்ள தமது இல்லத்தில் 18-2-49 தில் காலமானுர். இறக்கும்போது அவருக்கு வயது 57. இலங்கை மாணவர்கள் பலர் இவரிடம் பயின்றுள்ளனர். சென்னைப் பல்கலைக்கழகத்துடன் கல்வித்துறை சம்பந்தமான சபைகளில் அவர் உழைத்துள்ளார்.

## திருவள்ளுவர் தினம்

இம்மாதம் 15ந்தேதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3மணிக்கு அளவெட்டி சதானந்தா வித்தியாசாலை மண்டபத்தில் தமிழ்நாடு தந்த தனிப்பெரும் புலவர் திருவள்ளுவ நாயனுரின் நினைவுநாள் விழா கொண்டாடப் பட்டது.

## ஸ்ரீ ராம கிருஷ்ணர் ஜெயந்தி கோப்பாயில் விழா

கோப்பாயிலுள்ள மகளிர் அரசினர் ஆசிரிய கலாசாலையில் 1-3-49 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5மணிக்கு ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஜெயந்திவிழா கொண்டாடப்படுமெனக் காரியதரிசி தெரிவிக்கின்றுர்.

## ஸ்ரீராமகிருஷ்ண மடம்

ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் ஜெயந்திவிழா வெள்ளவத்தையிலுள்ளமடத்தில் 1-3-49ந்திகதி கொண்டாடப்படும். காலை 9மணி முதல் 12 வரை பூசையும் பஜனையும் நடைபெறும். பின் பிற்பகல் 6 மணிக்குப் பூசை ஆரம்பமாகும்.

## நவாலி சமூகசேவாசங்கம்

நவாலி சமூகசேவாசங்கத்தின் ஆதரவில் ஓர் பகிரங்கக் கூட்டம் நவாலி அமெரிக்கன்மிஷன் பாடசாலையில் மேற்படி சங்கத்தலைவர் திரு வ. மகேசன் அவர்கள் தலைமையிற் கூடிற்று.

நவாலி கிராமமுன்னேற்றச்சங்கம் நிறுவப்படவேண்டுமென்றும், சமூகசேவாசங்க நிர்வாகசபையே அதற்குநிர்வாகசபையாகஇருக்கவேண்டுமென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபை

திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையின் காரிய நிர்வாக சபைக் கூட்டமொன்று சமீபத்திற் கூடியது. யாத்திரீகர்களின் வசதிக்காக இப்பொழுது திருக்கேதீஸ்வரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் திருஞானசம்பந்த மூர்த்திநாயனர் மடக்கட்டிடக் கணக்குகள் சபையாருக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. ஆலயத்திருப்பணிக்கு வேண்டிய பணத்தைச் சேகரித்தற்குச் சைவ நன்மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துத் தீவிரமுயற்சியுடன் பணத்தைச் சேர்க்கத் தொடங்குதல் வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## சுகாதார பரிசீலனை

இலங்கைப் பள்ளிக்கூடங்களிலுள்ள மாணவ மாணவிகளுக்குக் காய்ச்சற்கட்டி இருக்கின்றதா என்பதுபற்றிப் பரிசீலனை செய்து வருகின்றனர். இம் முயற்சி அடுத்தமாதத்திற் பூர்த்தியாகுமென அறியக்கிடக்கின்றது.

## இராணுவத்தலைவர் பிரிட்டன் தெரிவு

இலங்கை இராணுவ மசோதாவின்படி அமைக்கப்படவிருக்கும் புதிய இராணுவப் பகுதியை அமைத்து நடாத்துவதற்கு பிரித்தானிய யுத்த காரியாலயத்திலிருந்து ஒருவர் தெரிவு செய்யப்பட்டு இலங்கைக்கு விமான மார்க்கமாக அனுப்பப்படுவார். இது விரைவில் நடைபெறும்.

பூகோளத்தொடர்
பூமிசாஸ்திரம்
நான்காம், ஐந்தாம் புத்தகங்கள்

பலகாலம் ஆசிரியராயிருந்து அனுபவம்பெற்ற திரு. வே. மு. சபாரத்தினசிங்கம், B. A., அவர்களால் 4-ம், 5-ம் வகுப்புகளுக்கென, பாடத்திட்டத்துக்கமையச் சிறந்த முறையில் எழுதி வெளியிடப்பட்டிருக்கின்றன.

4-ம் புத்தகம் — சதம் 80
5-ம் புத்தகம் — ரூ. 1-00
தபாற் செலவு வேறு

சுன்னுகம் : தனலக்குமி புத்தகசாலை

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு திருமகள் நிலையம் நா. பொன்னையா அவர்களால் சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தில் 1949-ம் ஆ. பெப்ருவரி மீ 27உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org